தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹10/- மலர் 15 இதழ் 8 டிசம்பர் 2013 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த உங்களின் சாதனைகளைக் காணும் போது, 'பெண் என்பவள் சக்தியின் பிறப்பிடம்' என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருமிதமாகக் குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது.

திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களான உங்களை புத்தாண்டு தினத்தில் முற்றம் வாயிலாக சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அடுப்படியில் அடிமையாக இருந்த பெண்கள் இன்று ஆணுக்கு நிகராக அனைத்துத் துறையிலும் சாதனை படைக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளதை கண்டு, உலகே வியந்து பாராட்டுகிறது. குறிப்பாக மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த உங்களின் சாதனைகளைக் காணும் போது, 'பெண் என்பவள் சக்தியின் பிறப்பிடம்' என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருமிதமாகக் குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது.

பெண்கள் பொருளாதார சுய சார்பு பெற வேண்டும், அனைத்து துறையிலும் அவர்கள் சாதனைகள் படைக்க வேண்டும், சுய உதவிக் குழு மகளிருக்கு அனைத்து அதிகாரங்களும் கிடைக்க வேண்டும் என்ற என்ற உன்னத நோக்கத்துடன், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீட்டும் திட்டங்களை, சிறிதும் சுணக்கமின்றி செயல்படுத்துவதில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், புதுவாழ்வு திட்டம் ஆகியவை எப்போதும் முன்னணியிலேயே நிற்கிறது என்பதை உங்களுக்கு இத்தருணத்தில் நினைவுபடுத்துகிறேன். சுய உதவிக் குழு மகளிருக்கு வளமான வாழ்வை அமைத்துத் தரும் நோக்கத்துடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீட்டும் திட்டங்களை, ஊக்கத்துடன் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புதுவாழ்வு திட்டம் போன்றவை, மகளிருக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகளை வழங்கி தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்து, தொழில் முனைவோர்களாக அவர்களை உருவாக்கி வருவதுடன், விற்பனைக் கண்காட்சிகள், கல்லூரி சந்தைகள் போன்றவற்றை நடத்தி, மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளையும் நாடு தழுவிய அளவில் ஏற்படுத்தி தரும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றன என்பது உங்களுக்குத் தெரியும்.

சுய உதவிக் குழு மகளிரின் வளமான வாழ்விற்கு உறுதுணையாக, வங்கித் தொடர்பாளர் பணியிலும் சுய உதவிக் குழு மகளிர் ஈடுபட்டு வருகின்றனர் என்பது அவர்களின் வளர்ச்சிக்கு ஒரு மைல்கல்லாகும். நம் மாநிலத்தை வறுமையற்ற மாநிலமாக உருவாக்கும் நோக்கத்துடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீட்டியுள்ள 'தொலைநோக்கு 2023' என்ற திட்டத்தை வெற்றி பெறச் செய்யும் வண்ணம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தற்போது நம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. சுய உதவிக் குழு உறுப்பினர்களாகிய நீங்கள் உங்களின் அயராத பணியின் மூலம் அந்த இயக்கத்தினை வெற்றி பெறச் செய்வீர்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். எனவே வந்து விட்ட புத்தாண்டில் வளம் நிறைந்த வாழ்வை பெற்று, பொங்கல் போல மகிழ்ச்சி பொங்க நீங்கள் சிறக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன். மகளிர் வாழ்வு வளம் பெற அயராது பாடுபட்டு வரும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவோம் என்று நீங்கள் உறுதி எடுத்து செயல்படுங்கள். உங்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும், புதுவாழ்வு திட்டமும் என்றும் துணை நிற்கும்.

மேலாண்மை இயக்குநர்

உங்கள் நலம் உங்கள் கையில்!

மார்பக பரிசோதனை செய்து கொள்ள பயப்பட வேண்டாம்!

மார்பக புற்று நோயை தவிர்க்க

- 30 வயதும் அதற்கு மேற்பட்ட பெண்கள் மாதந்தோறும் மார்பக சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்
- ஏதேனும் மாற்றம் தெரிந்தால் அரசு மருத்துவமனை (அ) ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெண் மருத்துவர் (அ) பெண் செவிலியரிடம் மார்பக பரிசோதனை செய்து கொள்ளுங்கள்
- பயப்பட வேண்டாம்! மார்பக பரிசோதனை ஒரு சில நிமிடங்களில் செய்யக்கூடியது, வலி இல்லாதது, எளியது
- ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டால் மார்பக புற்றுநோய் முற்றிலும் குணப்படுத்த முடியும்

தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●
முற்றம்
மலர் 15 இதழ் 08 டிசம்பர் 2013
விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்
மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
கோ. ராதா
கூடுதல் இயக்குநர்

ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்

எம். மாதவி
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
மு. மேகவர்ணம்
மக்கள் தொடர்பு அலுவலர்

அனுப்புகை உதவியாளர் - முற்றம்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

தொலைபேசி: 044-2817 3412 / 3413
தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

தொடரும் பயணம் ... 2014!

அன்புள்ள வாசகர்களுக்கு,

புதிய ஆண்டில் அடி எடுத்து வைக்கும் நாம், சென்ற ஆண்டு கடந்து வந்த பாதையில் பல்வேறு நிகழ்வுகளாக வெற்றி - தோல்விகளையும், சாதனைகள்-சோதனைகளையும், இன்பம்-துன்பங்களையும் சந்தித்திருப்போம். நாம் அடைந்த வெற்றிகளையும், செய்த சாதனைகளையும், பெற்ற இன்பங்களையும் மற்றவர்களோடு பகிர்ந்து மகிழ்ச்சியோடு கொண்டாடுவதோடு மட்டுமின்றி, அவற்றை தக்க வைத்துக் கொள்வதற்கான யுக்திகளையும் கையாள கற்றுக் கொள்ள வேண்டும்.

அதே வேளையில் நாம் பெற்ற துன்பங்கள், சோதனைகள், தோல்விகள் ஆகிய எதிர்மறையான நிகழ்வுகளை நாம் அனுபவப் பாடங்களாக எடுத்துக் கொண்டால் மட்டுமே நமது முன்னேற்ற பாதையில் தொடர்ந்து நடைபோட முடியும். அனுபவம் என்பது வாழ்க்கையில் நாம் செய்த தவறுகள்தான்.

மகளிர் குழுக்களில் சென்ற ஆண்டு திட்டமிட்டவாறு அனைத்து செயல்பாடுகளையும் செய்திருக்கின்றோமா? அதில் எந்த அளவில் சாதித்திருக்கின்றோம், சாதிக்க முடியாதவைகளுக்கு என்ன காரணம், யார் காரணம் என்பவைகளை இந்த புதிய ஆண்டிலாவது சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்து, அந்த ஆய்வின் அடிப்படையில் ஒவ்வொரு குழுவும் இந்த புதிய ஆண்டிற்கான செயல் திட்டத்தை தீட்டி, அதன்படி சிறப்பாக செயல்பட முயற்சிக்க வேண்டும்.

தமிழர்களின் தனிப்பெரும் நாளான பொங்கல் திருநாள், அறுவடைத் திருவிழாவாக ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் மகிழ்ச்சியோடு கொண்டாடப்பட்டு வருகிறது. உலகிலுள்ள உயிர்கள் அனைத்திற்கும் உணவளிக்க தங்களது உடலுழைப்பை வழங்கும் விவசாய பெருமக்களையும், விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கும் கால்நடைகளையும், இயற்கையையும் நன்றியோடு நினைத்து பார்க்கும் நாள்தான் பொங்கல் திருநாள்.

உழைப்பிற்கு நன்றி கூறும் திருநாளான இப்பொங்கல் நன்னாளில் உங்கள்அனைவரின் குடும்பங்களில், குழுக்களில், கூட்டமைப்புகளில், சமுதாயத்தில் தமிழ் மணம் வீசட்டும்... பொங்கல் போல் மகிழ்ச்சி பொங்கட்டும்.

மேலும், ஜனவரி மாதத்தில் நமது நாட்டின் குடியரசு தினம் கொண்டாடப்படுகிறது. 'ஜனநாயகம்' என்பது, 'மக்களுக்காக மக்களே ஆட்சி செய்வது' என்பதை குறிக்கும் ஒரு தத்துவமாகும். இந்த தத்துவத்திற்கான செயல் வடிவத்தைதான் 'குடியரசு' என்கிறோம். டாக்டர் அம்பேத்கர் அவர்களால் இந்திய நாட்டிற்கான அரசியல் சாசனம் வடிவமைக்கப்பட்டு, அதை செயல்படுத்தவதற்கு இந்திய அரசால் முதன் முதலாக அறிமுகப்படுத்திய நாள்தான் குடியரசு தினமாகும்.

மகளிர் குழுக்கள் ஜனநாயக முறைப்படி செயல்படும்போது, அவைகளின் பிரச்சனைகள் குறைந்து, குழுக்களும் வெற்றிகரமாக செயல்படும். சட்டத்திற்கு முன்பு அனைவரும் சமமே என்பதைக் கருத்தில் கொண்டு செயல்படுவோம்.

புலர்ந்திடும் புத்தாண்டு மற்றும் பொங்கிடும் பொங்கல் திருநாளில் நீங்கள் அனைத்து நலங்களையும் வளங்களையும் பெற வேண்டும் என்ற வாழ்த்துகளை முற்றம் அனைத்து வாசகர்களுக்கும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு
(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

கடிதங்கள்

மாதந்தோறும் சுய உதவிக் குழுக்கள் குறித்த செய்திகளை வண்ணப் படத்துடனும், பயனுள்ள குறிப்புகளான மருத்துவம், சட்டம், பொது அறிவு, வரலாற்று கால செய்திகள், ஆங்கில வார்த்தைகள் போன்றவற்றை சுய உதவிக் குழுக்களின் மகளிர் அறிந்து கொள்ளும் வகையிலும் சிறப்பாக தாங்கி வரும் முற்றத்திற்கு எங்கள் குழுவின் சார்பில் வாழ்த்துகள்.

உறுப்பினர்கள்
தெரசா மகளிர் சுய உதவிக் குழு,
தாதகாப்பட்டி, சேலம் மாவட்டம்.

வெற்றி பெற்ற குழுக்களின் பேட்டிகள், வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் போன்றவற்றை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் எளிமையாக வெளியிட்டு வரும் முற்றம் இதழ் எங்கள் குழுவிற்கு நல்ல வழிகாட்டியாக உள்ளது என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொள்கிறோம்.

உறுப்பினர்கள்
ரோஜா மகளிர் சுய உதவிக் குழு,
பூந்தமல்லி, திருவள்ளூர் மாவட்டம்.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் நடவடிக்கைகள் மூலம் வளமான வாழ்வு பெற்று வரும் கிராமப்புற ஏழை மக்களின் வெற்றிக் கதைகளும், மக்கள் கற்றல் மையம், புதுவாழ்வு திட்டம், தொழிற் திறன் பயிற்சி பெற்றவர்கள் கூறும் செய்திகளும், அனைத்துப் பகுதி மக்களுக்கும் சென்று சேரும் வகையில் மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றம் எங்கள் குழுவின் செயல்பாடுகளையும் வெளியிட்டு எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி வேண்டும் என்று விரும்புகிறோம். முற்றத்திற்கு எங்களின் நன்றி.

உறுப்பினர்கள்,
தங்கம் மகளிர் சுய உதவிக் குழு,
சமயபுரம், திருச்சி மாவட்டம்.

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

இப்படிக்கு

உள்ளே...

பெண்கள் நாட்டின் கண்கள் பக்கம்...4

பெண்களைக் காக்கும் தற்காப்பு முறைகள்... பக்கம்...8

மகளிர் மேளா – 2014 பக்கம்...10

வீடுதோறும் பப்பாளி பக்கம்...14

தை... தை... பக்கம்...16

புது வாழ்வு தந்த புது கௌரவம் பக்கம்...29

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org

ஜனவரி 12

தேசிய இளைஞர் தினம்

வெற்றிபெறுவதற்குநிறைந்தவிடாமுயற்சியும்,பெரும்மன உறுதியினையும்நீங்கள்பெற்றிருக்கவேண்டும்.விடாமுயற்சி உடையவர்கள் சமுத்திரத்தையே குடித்து விடுவர்; அத்தகைய ஆற்றலை, அத்தகைய மன உறுதியை நீ பெற்றிடு; கடுமையாக உழை; நீ உனது குறிக்கோளினையடைவாய் – சுவாமி விவேகானந்தரின் சிந்தனையில் உதித்த வரிகள் இவை. சுவாமி விவேகானந்தர் பிறந்த நாளான ஜனவரி 12 தேசிய இளைஞர் தினமாக நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. அன்னாரின் வழிநடப்போம். ■

தினம்... தினம்...

தேசிய பெண் குழந்தைகள் தினம்

ஜனவரி 24

பெண் குழந்தைகளுக்கு எதிரான பாரபட்சத்தைப் போக்கும் விதமாக தேசிய பெண் குழந்தைகள் தினம் ஜனவரி 24ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. 'பெண் சிசுக் கொலை, குழந்தை திருமணம், குழந்தைத் தொழிலாளர் முறை ஆகியவற்றை ஒழிப்போம்; அனைவருக்கும் சுகாதாரம், சத்துணவு, கல்வி, வேலை வாய்ப்புகளில் சமத்துவம் வர பாடுபடுவோம்' என இந்நன்னாளில் உறுதி ஏற்போம். ■

ஜனவரி 26

இந்தியக் குடியரசு தினம்

குடியரசு என்பதன் பொருள் 'மக்களாட்சி' என்பதாகும். தேர்தல் மூலம் மக்கள் தாங்கள் விரும்பிய, நல்ல, திறமையான, நேர்மையான ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் முறையே மக்களாட்சி எனப்படுகிறது. 'மக்களுக்காக மக்களுடைய மக்கள் அரசு' என்பதே குடியரசின் பொருளாகும். 1950ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஜனவரி 26ஆம் நாள் குடியரசு தினம் கொண்டாடப்படுகிறது. இத்தினத்தில் சிறந்த சேவை புரிந்தோருக்கும், வீர தீர சாகசங்கள் புரிந்தோருக்கும் விருதுகள், பாராட்டுப் பத்திரங்கள், பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது. சுமார் 120 கோடிக்கும் மேலான மக்கள் தொகை கொண்ட நாடாக நமது இந்தியா இருந்தாலும், சாதி, மதம், இனம், மொழி எனப் பல வேறுபாடுகள் இருந்தாலும், அனைவரும் இந்தியர் என்பதில் பெருமை கொள்வோம். ஒற்றுமையுடன் செயல்பட்டு நாட்டின் வளர்ச்சிக்குத் தோள் கொடுப்போம். ■

ஜனவரி 30

தியாகிகள் தினம்

நம் நாட்டின் விடுதலைக்காக தங்கள் இன்னுயிரை ஈந்த இலட்சக்கணக்கான விடுதலைப் போராட்ட வீரத் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் மறைந்த தினமான ஜனவரி 30ம் நாள், தியாகிகள் தினமாக ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது. இந்திய மக்கள் ஒவ்வொருவரும் விடுதலைக் காற்றை சுவாசிக்க தங்களின் இன்னுயிரை ஈந்த ஒவ்வொரு தியாகிகளின் வீரச் செயல்களையும் நினைவுபடுத்தி இளம் நெஞ்சங்களில் அவர்களின் பொது நலப்பற்றை விதைக்க வேண்டிய நாள்தான் இந்த தியாகிகள் தினம். ■

வாழ்வை வளமாக்கும்

வங்கிகள்

சென்ற இதழில் வங்கிகளின் துணைப்பணிகள் குறித்த பல்வேறு விவரங்களை அறிந்து கொண்டோம். இந்த இதழில் மேலும் பல விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

பயணிகள் காசோலை வெளியிடுதல்

ஒரு வங்கியின் பல்வேறு இடங்களில் உள்ள கிளைகளில் பணம் பெறுவதற்காக வழங்கப்படும் இக்காசோலை பல்வேறு முகமதிப்பில் வெளியிடப்படுகிறது. பணத்தை பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வதில் உள்ள இடரை குறைக்கிறது. வங்கிகள் வாடிக்கையாளரின் மாதிரி கையொப்பம் (Specimen Signature) பெற்ற பின், பயணிகள் காசோலையை வழங்குகிறது. இக்காசோலை வங்கியரால் மேல் ஒப்பம் இடப்படுகிறது.

பங்கு பத்திர முதலீட்டு (Stock Invest) காசோலை வெளியிடுதல்

பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை பெற விண்ணப்பிப்பதற்காக ஒரு வங்கி தனது வாடிக்கையாளருக்கு வெளியிடப்படுவது பங்கு பத்திர முதலீட்டு காசோலையாகும். இத்திட்டத்தின் கீழ் பங்குகள் வாடிக்கையாளருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தேதி வரை அவருக்கு வட்டி கிடைக்கிறது.

பங்குகளோ அல்லது கடன் பத்திரங்களோ வாடிக்கையாளருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது உறுதியான பின்பே வாடிக்கையாளரின் கணக்கிலிருந்து நிறுமத்தின் கணக்கிற்கு பணம் மாற்றப்படுகிறது. தேவையான அளவு இட்டு வைப்பு பெற்ற பின்பே வங்கி இவ்வகை காசோலைகளை வழங்குகிறது.

பரிசு காசோலை வெளியிடுதல்

திருமணம், பிறந்த நாள் மற்றும் பண்டிகை நாட்களில் ஒரு வாடிக்கையாளர் தனது சொந்தக்காரர்கள் மற்றும் நண்பர்களுக்கு பரிசாக வழங்குவதற்காக பரிசு காசோலைகள் வெளியிடப்படுகின்றன. பல்வேறு முகமதிப்பில் வங்கிகள் இம்மாதிரியான பரிசு காசோலைகளை வெளியிடுகின்றன.

தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM)

பணம் எடுப்பதற்காக வாடிக்கையாளர் வங்கிக்கு செல்லும் நேரத்தைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் மூலம் எந்த நேரத்திலும் பணம் பெறலாம். ■

திருமணம், பிறந்த நாள் மற்றும் பண்டிகை நாட்களில் ஒரு வாடிக்கையாளர் தனது சொந்தக்காரர்கள் மற்றும் நண்பர்களுக்கு பரிசாக வழங்குவதற்காக பரிசு காசோலைகள் வெளியிடப்படுகின்றன.

ஒரு வங்கியின் பல்வேறு இடங்களில் உள்ள கிளைகளில் பணம் பெறுவதற்காக வழங்கப்படும் பயணிகள் காசோலை பல்வேறு முகமதிப்பில் வெளியிடப்படுகிறது.

தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் மூலம் எந்த நேரத்திலும் பணம் பெறலாம்

பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை பெற விண்ணப்பிப்பதற்காக ஒரு வங்கி தனது வாடிக்கையாளருக்கு வெளியிடப்படுவது பங்கு பத்திர முதலீட்டு காசோலையாகும். இத்திட்டத்தின் கீழ் பங்குகள் வாடிக்கையாளருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தேதி வரை அவருக்கு வட்டி கிடைக்கிறது.

வாழ்வளித்த வங்கி சேவை

கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கும் வங்கிச் சேவை சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், வங்கி முகவர்களாக பணியாற்றும் சுய உதவிக் குழு மகளிர் இன்று அனைவராலும் பாராட்டும் அளவிற்கு திறம்பட செயலாற்றி வருகின்றனர்.

சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கி அவர்களின் வாழ்வில் வளம் பெறச் செய்து வரும் மகத்தான பணியினை வங்கிகள் மேற் கொண்டுள்ளன. வங்கி முகவராக உள்ள திருமதி நாகராணி, முற்றம் வாசகர்களுடன் தனது கருத்துக்களை பகிர்ந்து கொள்கிறார்.

வங்கி முகவராவதற்கு முன்னர்...

இராமநாதபுரம் மாவட்டம், காஞ்சிராங்குடி ஊராட்சியில் உள்ள கல்லக்குளம் கிராமத்தில் வசித்து வரும் நான், கடந்த 12 வருடமாக அன்னை தெரசா மகளிர் குழுவில் ஊக்குநராக செயல்பட்டு வந்தேன். எங்கள் ஊராட்சியில் காஞ்சிராங்குடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அந்த கூட்டமைப்பின் தலைவியாக என்னை தேர்ந்தெடுத்தனர்.

இந்த வாய்ப்பு கிடைத்தது எப்படி?

நான் கூட்டமைப்பின் தலைவியாக இருப்பதால் அடிக்கடி வங்கிக்கு சென்று வருவேன். இதனால் வங்கி அதிகாரிகளை எனக்குத் தெரியும். இந்நிலையில் எங்கள் பகுதியில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அதிகாரிகள் என்னிடம் வங்கி முகவர் பணி குறித்த விபரங்களை கூறி, என்னை வங்கி முகவராக பணி செய்யும்படி சொன்னார்கள். நானும் இந்தப் பணியினை ஏற்றுக் கொண்டேன்.

இந்தப் பணிக்கு பயிற்சி பெற்றீர்களா?

தூத்துக்குடியில் நடந்த 1 நாள் பயிற்சிக்கு என்னை அனுப்பி வைத்தார்கள். அங்கு இப்பணி குறித்து பயிற்சி கொடுத்ததுடன், மக்களிடம் எவ்வாறு செயல்படுவது என்பதையும் தெளிவாக சொல்லிக் கொடுத்தார்கள். பயிற்சிக்குப் பின்னர் முன் வைப்புத் தொகையாக ரூ. 25 ஆயிரம் செலுத்தினேன். எனக்கு ஸ்மார்ட் கார்டு இயந்திரம் கொடுத்தார்கள். அந்த இயந்திரம் மூலம் தினசரி ரூ. 25 ஆயிரம் வரை பொதுமக்களுக்கு பணம் பட்டுவாடா செய்கிறேன்.

வங்கி முகவராக நீங்கள் அடைந்த வெற்றி...

தற்போது எங்கள் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு, முதியோர் உதவித் தொகை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டப் பணியாளர்களுக்கு ஊதியம், கர்ப்பிணிகளுக்கு உதவித் தொகை, ஓய்வூதியம் மற்றும் கல்வி உதவித் தொகை போன்றவற்றை நான் பெற்றுத் தருகிறேன்.

வங்கி முகவர் பணி குறித்து...

வங்கி முகவர் பணியினை மேற்கொண்டு வருவதால் எங்கள் கிராமத்தில் எனக்கு நல்ல பெயர் கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை இராமநாதபுரம் மகளிர் திட்டம் எனக்கு வழங்கிய பரிசாக கருதுகிறேன். இதற்காக மகளிர் திட்டத்திற்கும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– ஆர். நாகராணி,
காஞ்சிராங்குடி கூட்டமைப்பு
இராமநாதபுரம் மாவட்டம்.
செல்பேசி 95005 23676

பெண்களைக் காக்கும் தற்காப்பு முறைகள்!

பெண்ணாகப் பிறந்து விட்டாலே இந்த உலகில் பல பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது. வீடுகளில் தனியாக இருக்கும் பெண்கள், அலுவலகப் பணிக்கு செல்லும் பெண்கள், கல்லூரி மாணவிகள் ஆகியோருக்கு எப்போதும் தீயவர்களால் ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது. ஆனால் பல பெண்கள் தங்களுக்கு அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது என்று நம்பிக்கையுடன் எந்த ஆபத்தைப் பற்றியும் கவலைப்படாமல் இருக்கிறார்கள். இந்நிலையில் உண்மையிலேயே ஆபத்து நேரிடும் சமயத்தில் எதுவும் செய்ய முடியாமல் அதிர்ச்சியில் உறைந்து போகிறார்கள். இந்த நிலையை மாற்ற பெண்கள் எப்போதும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் எச்சரிக்கை உணர்வுடன், ஆபத்துகளைச் சந்திக்க தயாராக இருக்க வேண்டும்.

ஆணின் தாக்குதலில் இருந்து பெண் தப்பிக்க முயற்சிக்க வேண்டும். அவ்வாறு தப்பிக்கும் போது ஆண்களைத் தாக்க வேண்டிய தேவையிருந்தால் நிச்சயமாகத் தாக்க வேண்டும். பின்னாலிருந்து பிடிக்கும் ஆணின் முன்பாதத்தில் ஓங்கி மிதித்தால், வலி தாங்காமல் அவன் பிடியை விட்டு விடுவான். காலால் அவனின் முழங்காலுக்குக் கீழ் உள்ள பகுதியில் ஓங்கி உதைத்தாலும் விட்டு விடுவான்.

ஆண்களின் உடலில் சில பகுதிகள் மிக மென்மையானவை. அந்தப் பகுதிகளில் தாக்கினால் அவன் விட்டு விடுவான். உதாரணமாகப் பின்னாலிருந்து பிடிக்கும் ஆணை ஒரு பெண் தனது முழங்கையால் அவனுடைய விலா எழும்பில் ஓங்கி இடித்தால் அவன் நிலை குலைந்து விடுவான். மார்புக்கு கீழே, வயிற்றுக்கு மேலே உள்ள மையமான பகுதியில் இடித்தாலும் அவனால் தாங்க முடியாது. தொண்டைக் குழிக்கு அருகில், நெற்றிப்பொட்டில், இடுப்புக்குக் கீழே எல்லாம் தாக்கினால் ஆண் எழுந்து கொள்ளவே முடியாது.

ஓர் இடத்திற்கு போகும் போது, இந்த இடத்தில் ஆணால் தனக்குப் பாதிப்பு ஏற்படும் என்று தோன்றினால், அந்த இடத்தில் உள்ள பொருட்களை வைத்து அவனை எப்படி தாக்கலாம், எப்படி தப்பிக்கலாம் என்பதை முதலில் அந்த இடத்தில் இருக்கும்போதே மனக்கண்ணில் கற்பனை செய்து பார்க்க வேண்டும். அப்படிச் செய்தால் ஒரு வேளை தாக்குதல் நிகழும் போது தப்பிப்பது எளிதாக இருக்கும். உதாரணமாக

ஹோட்டலில் உட்கார்ந்திருக்கும் போது ஓர் ஆண் கெட்ட நோக்கத்துடன் தன்னை நெருங்கி வந்தால் சூடான காபியை அவன் முகத்தில் ஊற்றி அவனை நிலைகுலையச் செய்து தப்பித்து விடலாம்.

பெண்கள் தங்கள் கைப்பையில் ஒரு விசிலை வைத்துக் கொள்ள வேண்டும். ஆணின் தாக்குதல் நிகழும்போது அந்த விசிலால் ஒலியெழுப்பினால் அக்கம்பக்கம் உள்ளவர்களின் கவனத்தை ஈர்க்க முடியும். ஏனெனில் உரத்த குரலில் கத்துவது எல்லோருக்கும்

பெண்கள் யாருமில்லாத இடங்களில் தனியாக இருப்பதை தவிர்க்க வேண்டும்.

பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொள்ளும் ஆணிடம் இருந்து தப்பிக்க அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு சிறிது தூரம் முன்னோக்கி ஓடி, பின் சட்டென்று திரும்பி அவனைத் தாக்க வேண்டும். ஆணைவிட பெண்கள் உடல் ரீதியில் வலிமை குறைந்தவர்கள்தான் என்றாலும் எளிதில் தாக்கும் முறைகளை பெண்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

முடியாது. இப்போது பெப்பர் ஸ்பிரே போன்ற தற்காப்புப் பொருட்கள் வந்து விட்டன. அவற்றையும் பயன்படுத்தலாம்.

கூட்டமுள்ள பகுதிகளில் பெண்கள் நடந்து செல்லும்போது கையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நடக்கக் கூடாது. கைகளைக் கட்டிக் கொண்டு நடந்தால் பின்புறம் இருந்து பிடிப்பவரையோ, அருகே வந்து இடிப்பவரையோ முழங்கையால் தாக்க முடியும். சுடிதார் துப்பட்டாவின் நுனிகள் முதுக்குபுறம் வரும்படி போட்டால் பின்புறமிருந்து துப்பட்டாவை இழுப்பார்கள். அப்போது நமது உடைகள் கிழிந்து விடும், கழுத்து நெறிபடும். முன்புறம் போட்டால் இந்தப் பிரச்சினையில்லை.

பெண்களைத் தாக்க வருகிறவர்கள் திட்டம் போட்டுதான் தாக்க வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களிடம் இருந்து தப்பிக்கவும், திருப்பித் தாக்கவும் தேவையான தற்காப்பு பயிற்சிகளை தகுதியான பயிற்சி நிலையத்தில் கற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் பயிற்சிகளை வீட்டில் செய்யும் போது, கணவர், சகோதரிகள், சகோதரர்கள் போன்றவர்களின் உதவியுடன் வீட்டிலேயே தினமும் செய்ய வேண்டும். இதனால் உண்மையிலேயே தாக்குதல் வரும் சந்தர்ப்பங்களில் திருப்பித் தாக்குவது எளிதாக இருக்கும்.

> **பெண்களைத் தாக்க வருகிறவர்களிடம் இருந்து தப்பிக்கவும், திருப்பித் தாக்கவும் தேவையான தற்காப்பு பயிற்சிகளை தகுதியான பயிற்சி நிலையத்தில் கற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் பயிற்சிகளை வீட்டில் செய்யும் போது, கணவர், சகோதரிகள், சகோதரர்கள் போன்றவர்களின் உதவியுடன் வீட்டிலேயே தினமும் செய்ய வேண்டும்.**

நீங்கள் செல்போனில் பேசியபடியே சாலையில் நடந்து செல்லும் போது, பின்னால் இருந்து வரும் ஒருவர் போனை பிடிங்கும் வகையிலோ அல்லது கழுத்தில் கிடக்கும் நகையை பறிக்கும் வகையிலோ தோள் மீது கை வைத்தால் பேசிய நிலையிலேயே கை மூட்டால் பின்னோக்கி பலமாக ஒரு குத்து விடுங்கள். அது எதிராளியின் மார்பையோ அல்லது மூக்கையோ பதம் பார்க்கும் வகையில் இருக்க வேண்டும். பின்னால் வந்த சில்மிஷம் செய்தாலும் இந்த தற்காப்பு முறையை கையாளலாம். எதிராளி பின்புறத்தில் சற்று தூரத்தில் நின்றிருந்தால், கையை வீசி புறங்கையால் தாக்கலாம். தேவைப்பட்டால் காலையும் பயன்படுத்தி தாக்குதல் நடத்தலாம்.■

(இன்னும் வரும்)

பிரதி வாரம் புதன்கிழமைதோறும் பகல் 12.00 மணி முதல் 01.00 மணி வரை சென்னை தொலைக்காட்சி, பொதிகை அலைவரிசையை பாருங்கள். மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த பல்வேறு விபரங்களை மகளிர் திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகள் விளக்கிக் கூறுகிறார்கள்.

உங்கள் சந்தேகங்களை

17077, 64628270, 9444901011, 9444901021

ஆகிய செல்பேசி எண்களில் தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்.

மகளிர் மேளா 2014

"கிறிஸ்துமஸ் - புத்தாண்டு - பொங்கல் விற்பனைக் கண்காட்சி"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் பொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடவும்,அப்பொருட்களைசந்தைப்படுத்திடவும், கிராம அங்காடிகள், கல்லூரி சந்தைகள், மாவட்ட அளவிலான விற்பனைக் கண்காட்சிகள், மாநில / தேசிய அளவிலான கண்காட்சிகள் என பல்வேறு கண்காட்சிகள் மூலமாக பிரபலப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழகத்தில் உள்ள அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்கிலும், விற்பனை வாய்ப்பினை மேம்படுத்தும் வகையிலும், சென்னையில் பண்டிகை மற்றும் விடுமுறை காலங்களில் மாநில அளவிலான விற்பனைக் கண்காட்சிகள் மூலமாக பல்வேறு விற்பனை வாய்ப்புகளை மகளிர் குழுக்களுக்கு ஏற்படுத்தித் தருகிறது.

இந்த விற்பனைக் கண்காட்சி 20.12.2013 முதல் 19.01.2013 வரை, காலை 10.30 மணிக்கு தொடங்கி இரவு 08.30 மணி வரை நடைபெறும். அனைத்து பண்டிகை விடுமுறை நாட்கள் மற்றும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளிலும் இக்கண்காட்சியில் விற்பனை நடைபெறும்.

அதன் தொடர்ச்சியாக, சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் மகளிர் மேளா 2014 'கிறிஸ்துமஸ் – புத்தாண்டு – பொங்கல் விற்பனைக் கண்காட்சியினை' 20.12.2013 வெள்ளிக்கிழமை அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. கே. பி. முனுசாமி அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள்.

இந்த விழாவில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை சா. துரைசாமி அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர்

திரு. நா.ச. பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள், சென்னை மாநகராட்சியின் 9வது மண்டலக்குழுத் தலைவர் திரு. எஸ். சக்தி மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட ஏராள மானவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த விற்பனைக் கண்காட்சி 20.12.2013 முதல் 19.01.2013 வரை, காலை 10.30 மணிக்கு தொடங்கி இரவு 08.30 மணி வரை நடைபெறும். அனைத்து பண்டிகை விடுமுறை நாட்கள், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் இக்கண்காட்சியில் விற்பனை நடைபெறும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களும், வணக்கத் திற்குரிய மேயர் அவர்களும், இக்கண்காட்சியில் மகளிர் திட்டத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், புதுவாழ்வுத் திட்ட சுய உதவிக் குழுக்கள், மாற்றுத் திறனாளிகள், முகாம் வாழ்

தமிழர்கள் மற்றும் திருநங்கையர் ஆகியோர் அமைத்திருந்த அரங்குகளை பார்வையிட்டு மகளிர் சுய உதவிக் குழு பெண்களிடம் அவர்கள் விற்பனைக்கு வைத்திருந்த பொருட்கள் குறித்து விவரங்களை கேட்டறிந்ததுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெண்களின் முன்னேற்றத் திற்காக மேற்கொண்டு வரும் பல்வேறு பணிகள் மற்றும் திட்டங்கள் குறித்து சுய உதவிக் குழு மகளிரிடம் தெரிவித்தனர்.

இக்கண்காட்சியில் சுய உதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருட்களான, பட்டு மற்றும் கைத்தறி ஆடைகள், வீட்டு உபயோகப் பொருட்கள், வண்ண வண்ண மணிகள், கடல்சார் பொருட்கள், காதிகம், சணல், தேங்காய் நார், துணி ஆகியவற்றால் செய்யப்பட்ட கலைப் பொருட்கள், காகிதத்தில் செய்யப்பட்ட ஆபரணங்கள், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான ஆயத்த ஆடைகள்,

மூலிகைப் பொருட்கள், புளி, சோப்பு, தேன், தேயிலை, கைக் குத்தல் அரிசி, சாமை, வரகு, குதிரை வாலி அரிசி போன்ற பாரம்பரிய உணவுப் பொருட்கள், பனை ஓலை மற்றும் வாழை நாரில் தயாரிக்கப்பட்ட பொருட்கள், அழகிய சிற்பங்கள் போன்றவை உட்பட ஏராளமான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அறுசுவை நிறைந்த உணவுகளை விற்பனை செய்யும் உணவகமும் அமைக்கப்பட்டுள்ளது. ■

பகுதி - 8

காப்பீடு

இன்றைய அவசியத் தேவை

வெளிநாடு பயணம் மேற்கொள்பவர்கள் செய்யும் அயல் நாட்டு காப்பீடு குறித்து இப்பகுதியில் காணலாம்.

பயணக் காப்பீடு

அயல்நாட்டு பயணத்தில் ஏற்படுகின்ற நிதி சார்ந்த நட்டங்களுக்கு எதிரான பாதுகாப்பை பயணக் காப்பீடு திட்டம் அளிக்கிறது. விடுமுறை அல்லது தொழில் போன்ற வெவ்வேறு காரணங்களுக்காக வெளிநாட்டு பயணம் மேற்கொள்ளலாம். இந்த காலத்தில் காப்புறுதி செய்ய அயல்நாட்டு பயண காப்பீடு திட்டம் இருக்கிறது. உங்களுடைய பயண பைகள் தொலைந்து விடுதல், பயணத்திற்கிடையேயான மருத்துவ அவசரம் அல்லது விபத்து போன்ற நிகழ்வுகளிலிருந்து உங்களை இந்தத் திட்டம் பாதுகாப்பளிக்கும்.

பாலிசியில் குறிப்பிடப்பட்டிருக்கும் நாள் முதல் அல்லது அயல்நாட்டு பயணத்திற்காக கிளம்பும் பொழுது அல்லது பாலிசியில் அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கும் உண்மையான ஒப்பந்தப்படியான பயணம் செல்லும் தேதி, இதில் எது பின்வருகிறதோ அதிலிருந்து பயணக் காப்பீடு ஆரம்பமாகிறது. காப்பீடு காலங்களின் இறுதி வரை அல்லது காப்பீடு செய்த நபர் இந்தியாவிற்கு திரும்பி வந்தது முதல், பயணித்தவற்றிலிருந்து இறங்கும் வரை பயணக் காப்பீடு தொடர்ந்து செல்லத்தக்கதாக இருக்கும். இதில் எது முன் வருகிறதோ அதுவரை பயணக் காப்பீடு செயல்படும்.

சில சூழ்நிலைகளால் காப்பீடு செய்யப்பட்டவரின் பயணத்தில் தாமதம் ஏற்படும் பொழுது காப்பீடு திட்டத்தின் பயன்களின் காலத்தை பல காப்பீடு நிறுவனங்கள் அதிகரிக்கும்.

ஒருமுறை பயணம் அல்லது பல முறைப் பயணத்திற்கான காப்பீட்டை நீங்கள் தேர்ந்தெடுக்க முடியும். ஒருமுறைப் பயண பாலிசியாக இருந்தால், குறிப்பிட்ட பயணத்திற்கு மட்டு மான பாதுகாப்பு செல்லத்தக்கதாகும். பலமுறை பயணத் திற்கான பாலிசியாக இருந்தால் காப்பீடு காலத்திற்கிடையே மேற்கொள்ளும் அனைத்து பயணங்களுக்கும் பாதுகாப்பை விரிவாக்குகிறது.

அயல்நாட்டு பயணம் மேற்கொள்ளும் சமயத்தில் நோய் தாக்கினால் காப்பீட்டின் மூலம் மருத்துவ சிகிக்சை மேற் கொள்ளலாம். சிகிச்சை அளிக்கப்படும் அதிகபட்ச கால அளவு நிறுவனத்திற்கு நிறுவனம் மாறலாம்.

புதுவாழ்வு திட்டம் மூலம் தொழிற்பயிற்சி பெற்று துபாயில் பணி புரிந்து வரும் இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டாரம், குமாரகுறிச்சியை சேர்ந்த ரா. முருகவேல் கூறும் போது, 'வெளிநாடு பயண காப்பீடு எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது' என்று குறிப்பிட்டார்.■

(தொடரும்)

இங்கிலீஷ்ல பேசலாம் ஈஸியா...

2000 ஆங்கில வார்த்தைகள் தெரிந்து கொள்வோம்

பகுதி - 9

உடல் உறுப்புகள்	**Parts of Body**
தோள்	Shoulder
கைகள்	Hands
உள்ளங்கை	Palm
விரல்கள்	Fingers
நகங்கள்	Nails
வயிறு	Abdomen
தொப்பை	Belly
தொப்புள்	Navel
இடுப்பு	Waist
தொடை	Thigh

நோய்கள்	**Diseases**
விக்கல்	Hiccup
நரம்பு தளர்ச்சி	Hysteria
சிறிய அம்மை	Chicken Pox
பெரிய அம்மை	Small Pox
படை	Ringworm
குடற்புண்	Ulcer
தலைவலி	Headache
பல் வலி	Toothache
முதுகு வலி	Back pain
சுளுக்கு	Sprain

ஊர்வன	**Reptiles**
உடும்பு	Wood Lizard
முதலை	Crocodile
ஆமை	Tortoise
பாம்பு	Snake
நாகம்	Cobra
ராஜ நாகம்	King Cobra
மலைப்பாம்பு	Python
நீர்ப்பாம்பு	Water Snake
ஓணான்	Lizard
பல்லி	House Lizard

(தொடரும்)

சட்டம் ஒழுங்கு சிறப்பாக பராமரிக்கப்பட்டு தமிழகத்தில் அமைதி நிலவுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில்

மாவட்ட ஆட்சியர்கள் - காவல்துறை அதிகாரிகள் மாநாடு

'அரசின் நலத்திட்டங்கள் ஏழை மக்களை முழுமையாக சென்று சேர வேண்டும். அதற்கு நீங்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கண்டிப்பான அதிகாரிகள் என்பதை விட, மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுபவர்களாக இருப்பார்கள் என்ற பரந்த உள்ளத்துடனும், மனிதாபி மானத்துடனும் செயலாற்றுபவராக இருக்க வேண்டும்'

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் – காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய உரை

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் 11.12.2013 முதல் 13.12.2013 வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இம்மாநாட்டை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

முதல் நாள் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடும், இரண்டாம் நாள் மாவட்ட ஆட்சியர்கள் மாநாடும், மூன்றாம் நாள் காவல்துறை அதிகாரிகள் மாநாடும் நடைபெற்றது. மாநாட்டின் நிறைவு நாளன்று மாநாட்டில் நிறைவுறையாற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 312 அறிவிப்புகளை வெளியிட்டார்.

தமது அரசின் தொலைநோக்குத் திட்டங்களை செயல்படுத்துவதில், மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் ஒருங்கிணைந்து பணியாற்றுவது பாராட்டுக்குரியது என்றும், இதன் மூலம் தமிழகத்தில் பொது அமைதி சிறப்பாக நிலைநாட்டப்படுவதாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டார்.

தமிழக அரசின் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் மக்களிடம் எவ்வாறு பரவலாக சென்று சேர்கிறது என்பதை, சிறப்பாக வெளிப்படுத்திய மாவட்ட ஆட்சியர்களைப் பாராட்டுவதாகவும், மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை அதிகாரிகளும் தங்கள் பகுதியில் உள்ள தேவைகளையும், மக்களின் எண்ணங்களையும் தொகுத்து வழங்கியிருப்பதாகவும், கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும்குறிப்பிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சரின் தனிப்பிரிவில் இருந்து அனுப்பப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு, சிறப்பாக பணியாற்றிய காவல்துறையினர், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு கேடயம் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டினார்கள். ■

ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் உள்ளிட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் அரசின் நலத்திட்டங்கள் சென்றடையச் செய்வதில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு முக்கியப் பொறுப்பு உள்ளது.

காலிபிளவர் மசாலா கேழ்வரகு தோசை

தேவையான பொருட்கள்

கேழ்வரகு மாவு – 1 கப், அரிசி மாவு – அரை கப், உளுந்து – அரை கப்

செய்முறை

உளுந்தை 4 மணி நேரம் ஊற வைத்து நைசாக அரைத்துக் கொள்ளவும். முதல் நாள் இரவே கேழ்வரகு மாவு, அரிசி மாவு, அரைத்த உளுந்து, உப்பு சேர்த்து கலந்து வைக்கவும். தக்காளி, வெங்காயம், கொத்தமல்லி தழை, காலிஃபிளவரை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அடுப்பில் கடாய் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி வெங்காயம், தக்காளி போட்டு வதக்கிய பின்னர் காலிபிளவர் சேர்த்து வேகும் வரை நன்கு வதக்கவும். வெந்ததும் மிளகாய் தூள், மிளகு தூள், தேவையான அளவு உப்பு சேர்த்து கொத்தமல்லி தழை தூவி இறக்கி வைக்கவும்.

அடுப்பில் தோசை கல்லை வைத்து அதில் கலந்து வைத்த மாவை மெல்லிய தோசைகளாக ஊற்றி மேலே மூடி வைக்கவும். வெந்ததும் தோசையின் நடுவே காலிபிளவர் மசாலாவை வைத்து இரண்டாக மடித்து எடுக்கவும். சத்தான, சுவையான காலிபிளவர் மசாலா கேழ்வரகு தோசை ரெடி. இதை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி சாப்பிடுவார்கள். ■

வீடுதோறும் பப்பாளி

இயற்கை மருத்துவ குணமும், நிறைந்த சத்தும் கொண்ட பப்பாளியில் வைட்டமின் ஏ, சி, இ, ஃபோலட் மற்றும் நார்ச்சத்து போன்றவை உள்ளன. பப்பாளியில் உள்ள பேராக்ஸ்நேஸ் என்ற தாதுப்பொருள் உடலில் உள்ள கொழுப்பை குறைக்க உதவுகிறது. சிறுநீரகத்தில் கல் உள்ளவர்கள் தினமும் இரண்டு வேலை பப்பாளியை சாப்பிட்டு வந்தால் விரைவில் குணம் அடையலாம்.

எளிதில் கிடைக்கும் இந்த பழத்தை வயது வித்தியாசமின்றி அனைவரும் சாப்பிடலாம். கர்ப்பிணிகள் பப்பாளி பழத்தை சாப்பிடக் கூடாது. வயிற்றுப் புண் உள்ளவர்கள் இந்தப் பழத்தை தினமும் சாப்பிட்டால் விரைவில் குணமாகும். மாவு சத்து நிறைந்த உணவுப் பொருட்களை அதிகம் சாப்பிடுவதால் ஏற்படும் செரிமானக் கோளாறுகள் பப்பாளி பழத்தை சப்பிட்டால் நீங்கும். கலோரியும் கொழுப்பு சத்தும் குறைவாக உள்ள இந்தப் பழம் உடல் எடை அதிகரிக்காது பார்த்துக் கொள்ளும் தன்மை வாய்ந்தது. பப்பாளியில் உள்ள பொட்டாசியம் உப்பு போன்றவை உயர் ரத்த அழுத்தத்தை குறைக்கும். இந்தப் பழத்தின் தோல் முகத்திற்கு ரொம்ப நல்லது.

வாரம் இரண்டு முறை பப்பாளி பழத்தின் தோலை முகத்தில் தடவி வந்தால், முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள், சொரசொரப்பு தன்மை மாறி முகம் பளபளப்பாக இருக்கும். மலச்சிக்கல் தீர பப்பாளி பழத்தை சாப்பிடலாம். வயிற்றில் உள்ள புழு பூச்சிகளை நீக்கும் தன்மை வாய்ந்தது பப்பாளி பழம்.

ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக வேண்டும் என்ற நோக்கத்துடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் குழந்தைகள் தங்கள் வீடுகளில் வளர்க்கும் வகையில், வைட்டமின் 'ஏ' சத்து கொண்ட, 6.5 இலட்சம் பப்பாளி மரக் கன்றுகள் வழங்கும் திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். அதன்படி சமீபத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பப்பாளி மரக்கன்றுகளை வழங்கினார்கள். ■

எங்கும் எளிதில் கிடைக்கும் இந்த பழத்தை வயது வித்தியாசமின்றி அனைவரும் சாப்பிடலாம். கர்ப்பிணிகள் பப்பாளி பழத்தை சாப்பிடக் கூடாது

கேள்வி-பதில்

கேள்வி:

எனக்கு வயது 28, என் தலை முடி நரைக்கத் துவங்கியுள்ளது. இயற்கை முறையில் தலைசாயம் தயாரிக்க முடியுமா?

பதில்:

அவுரி இலை, மருதாணி இலை, வெள்ளை கரிசலாங்கண்ணி, கறிவேப்பிலை இலை அனைத்தும் தலா 50 கிராம், பெருநெல்லி (கொட்டை நீக்கியது)–10. அவை அனைத்தையும் சேர்த்து நன்றாக அரைத்துக் கொள்ளவும். ஒருமடல் சோற்றுக் கற்றாழையை மிக்ஸியில் அரைத்து (சிறு சிறு துண்டுகளாகவும் சேர்க்கலாம்), அரைத்து வைத்துள்ள அவுரிக் கலவையுடன் சேர்த்து, ஒரு லிட்டர் தேங்காய் எண்ணெயுடன் கலந்து மிதமான தீயில் காய்ச்ச வேண்டும். கொதி நிலைக்கு வரும்போது இறக்கி வடிகட்ட வேண்டும். அதை பத்திரப்படுத்தி வைத்து, தினசரி தலைக்கு எண்ணெய் பூசுவது போல் பயன்படுத்தலாம். நாளடைவில் முடியின் நிறம் மாறுவதோடு, புதிதாகவும் முடி வளரும்.



கேள்வி:

பெண்கள் ஏன் மெட்டி அணிகின்றனர்? இதனால் என்ன பயன்?

பதில்:

அக்குபங்சர் மற்றும் அக்குபிரசர் ஆகிய மருத்துவ முறைகளால் ஏற்படும் நன்மைகள் குறித்து நமது முன்னோர்கள் அறிந்து வைத்துள்ளனர். பெண்களின் கருப்பை தொடர்பான முக்கிய நரம்புகள் கால் விரல்களில் இருக்கின்றன என்பதால் மெட்டி அணிவது நல்லது. வெள்ளியில் செய்த மெட்டிகளை அணிவதால் வெள்ளியில் இருக்கும் ஒருவித காந்த சக்தி கால் நரம்புகளில் ஊடுருவி நோய்களைத் தடுக்கும் ஆற்றல் உருவாகிறது. அதனால் கருப்பை நோய்களை கட்டுப்படுத்துகிறது. ■

பயனுள்ள குறிப்புகள்...

முகத்திற்கு பொலிவு தரும் இயற்கைப் பொருட்கள்

அழகைப் பராமரிக்கும் இயற்கைப் பொருட்கள்

வேதிப்பொருட்கள் கலந்த அழகு சாதனப் பொருட்களின் விலை அதிகமாக இருப்பது மட்டுமல்ல, தொடர்ந்து பயன்படுத்தி வந்தால், அவை சருமத்திற்கு, கூந்தலுக்கு மற்றும் உடலுக்கு கேடுகள் விளைவிப்பவை என்பது அனைவருக்கும் தெரியும். எனவே வீட்டில் அன்றாடம் பயன்படுத்தி வரும் இயற்கையான பொருட்கள் மற்றும் மூலிகைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, உடலை அழகாகப் பராமரிப்பதற்காக, சில அழகுக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை செய்து வந்தால் உடல் மற்றும் முகம் இயற்கை வழியிலேயே அழகு பெறுவதுடன், மனதுக்கு மகிழ்ச்சியையும், திருப்தியையும் அளிக்கும்.

பழச்சாறுகள்

சுருக்கமில்லா சருமத்துடன் எப்போதும் இளமையாக தோன்றுவதையே அனைவரும் விரும்புவோம். எலுமிச்சைச் சாறு, தேன், சாத்துக்குடிச் சாறு மற்றும் தயிர் ஆகியவற்றை நன்றாகக் கலந்து கொண்டு, சுருக்கங்கள் உள்ள இடங்களில் தடவி ஊற வைத்துக் கழுவ வேண்டும். இதனால் முகச்சுருக்கங்கள் மறைவதுடன், முகத்தில் உள்ள கரும்புள்ளிகளும் நீங்கும்.

திராட்சைப் பழங்கள் ஒரு அற்புதமான அழகு சாதனம் ஆகும். எனவே அவற்றை முகத்தில் அழுத்தித் தேய்த்தாலே போதும், முகம் புதுப்பொலிவுடன் பிரகாசிக்கும். முகத்தில் பருக்களும், சிறு கட்டிகளும் நிறைந்து காணப்படுபவர்கள் திராட்சைப் பழத்தை முகத்தில் தேய்த்தால் போதும்.

இயற்கை சத்து நிறைந்த பழங்கள் முகத்திற்கு பொலிவையும், உடலுக்கு நலத்தையும் தருகின்றன.

முட்டையின் வெள்ளைக்கரு

முகத்தில் உள்ள சுருக்கங்களை போக்குவதில் முட்டையின் வெள்ளைக் கருவும் உதவுகிறது. முட்டையின் வெள்ளைக் கருவை ஒரு கிண்ணத்தில் ஊற்றி நன்றாகக் கலக்கி அந்தக் கலவையை கண்கள், தாடை, நெற்றி, கன்னம் போன்ற பகுதிகளில் பூசி, அவைகள் நன்றாக காய்ந்த பிறகு கழுவித் துடைக்க வேண்டும். இவ்வாறு அடிக்கடி செய்து வந்தால், முகத்தில் உள்ள மெல்லிய கோடுகள், சுருக்கங்கள் ஆகியவை மெல்ல மறைந்து விடும்.

சோளமாவு - வாழைப்பழம்

நம் வீடுகளில் எப்போதும் இருக்கும் சோளமாவு மற்றும் வாழைப்பழம் ஆகியவை சிறந்த அழகு சாதனமாகும். இந்த இரண்டு பொருட்களையும் நன்றாக சேர்த்து பிசைந்து, பாதங்களில் தடவி, பின்பு பாதங்களை 30 வினாடிகள் மசாஜ் செய்தாலே போதும், பாதங்கள் மென்மையாகும்.

தேன்

குளிர் காலங்களில் சிலருக்கு உதடுகளில் வெடிப்பு ஏற்படும். இதைப் போக்கு சிறிது தேனை உதடுகளில் தடவலாம். அழகான உதடுகளை பெற விரும்பும் பெண்கள் உணவில் நிறைய பழங்களையும், காய்கறிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ■

சுரைக்காய்

நீர்ச்சத்து மிகுந்த சுரைக்காயில் வைட்டமின் பி2, இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து, புரதம் ஆகியவை உள்ளன. சுரைக்காயை சமைத்து சாப்பிட்டு வந்தால் உடல் வீக்கம் குறையும். சிறுநீர் அதிகமாக பிரியும், கர்ப்பிணிப் பெண்கள் இந்த காயை சமைத்து சாப்பிட்டு வந்தால் பாத வீக்கம் குறையும். சுரைக்கொடியை புண்டுடன் சேர்த்து சமைத்து சாப்பிட்டு வந்தாலோ அல்லது கொடியை நீர்விட்டுக் காய்ச்சி கஷாயமாக்கி குடித்து வந்தால், உடலில் தங்கிய நீர் வெளியேறி, உடல் வீக்கம் குறையும். ■

பசலைக் கீரை

பசலைக் கீரையை தினமும் உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால், உடலில் ஏற்படும் பெரும்பாலான பிரச்சனைகள் தீர்ந்து விடும். குறிப்பாக குழந்தைகளுக்கு இந்தக் கீரையை சாப்பிடக் கொடுப்பதால் அவர்கள் வலிமையுடனும், புத்திக் கூர்மையுடனும் வளர்வார்கள். இரும்புச் சத்து நிறைந்த இக்கீரையை சாப்பிடுவதால் ரத்த சோகை நோய் நீங்கும். இதய நோய் உள்ளவர்கள் பசலைக் கீரையை அடிப்படி சாப்பிட வேண்டும். ■

தாழம்பூ

மணம் மிகுந்த மலர்களில் தாழம்பூவும் ஒன்றாகும். உடல் உஷ்ணத்தால் ஏற்படும் நீர்க்கடுப்பு, பித்தம் உள்ளிட்ட பாதிப்புகளில் இருந்து தாழம்பூ காக்கிறது. தாழம் இலையின் விழுதை இடித்து சாறு பிழிந்து நெய்யுடன் கலந்து காய்ச்சி 5 மில்லி அளவு சாப்பிட்டு வந்தால் நீர்க்கடுப்பு, நீர்ச்சுருக்கு போன்றவை குணமாகும். தாழம்பூவை நெருப்புத் தணலில் காட்டி கசக்கி சாறு பிழிந்து அதில் சில துளிகள் காதில் விட்டால் காது வலி, காதில் தோன்றும் கட்டி ஆகியவை குணமாகும். தாழம்பு சாம்பலை காயங்களின் மீது பூச புண்கள் குணமாகும்.■

தை... தை...

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பழமொழிக்கு ஏற்ப தை மாதத்தின் முதல் நாள் பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது. மகர ராசியில் பிரவேசிக்கும் சூரியன், வட திசையில் தனது பயணத்தை தொடங்கும் நாளாக இது கருதப்பட்டு, கேரளாவிலும், வட மாநிலங்களிலும் 'மகர சங்கராந்தி' என்ற பெயரில் இந்த நாளை கொண்டாடுகின்றனர். ஆடிப்பட்டத்தில் தேடி விதைத்து மார்கழியில் அறுவடை செய்த தானியங்களை வீட்டிற்கு கொண்டு வரும் உழவர்கள், தங்களது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாள்தான் தைப்பொங்கல். செய்ந்நன்றி மறக்கக் கூடாது என்ற அரிய தத்துவத்தை உணர்த்தும் நாள் இது.

'பொங்கி வழிதல்', 'பொங்குதல்' என்பதுதான் பொங்கல் என்பதின் பொருள். புது பானையில், புத்தரிசியிட்டு, பொங்கலிடுகையில் அதில் இருந்து பால் பொங்கி வழிந்து பொங்கி வருவதால், பிறந்துள்ள புத்தாண்டு முழுவதும் நம் வாழ்வும், வளமும் அந்தப் பால் போன்று பொங்கி சிறக்கும். மகிழ்ச்சியும், திளைப்பும் ஒரு சேரப் பல்கிப் பெருகுவதோடு, கழனியெல்லாம் பெருகி, அறுவடை மென் மேலும் அதிகரிக்கும் என்பதே இந்தப் பண்டிகையின் தத்துவமும், தொன்றுதொட்டு வரும் நம்பிக்கையுமாகும்.

வயல்களில் விளைந்து, அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிரில் சிறிதளவைக் கொண்டு வந்து பொங்கல் தினத்தில் வீட்டில் படைத்து வணங்குவதும், காடுகளில் விளையக்கூடிய அனைத்து வகை காய்கறிகள், பூமிக்குள் விளையும் கிழங்கு வகைகள் போன்றவற்றை படைத்து வழிபடுவதும் பல இடங்களில் வழக்கமாக உள்ளது. அறுவடைத் தொடங்கியதைக்

> வயல்களில் விளைந்து, அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிரில் சிறிதளவைக் கொண்டு வந்து பொங்கல் தினத்தில் வீட்டில் படைத்து வணங்குவதும், காய்கறிகள், பூமிக்குள் விளையும் கிழங்கு வகைகள் போன்றவற்றை படைத்து வழிபடுவதும் பல இடங்களில் வழக்கமாக உள்ளது.

குறிக்கும் வகையில், பயிர் விளைச்சலுக்கு உதவிய மழை, சூரியன், கால்நடைகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்றி தெரிவித்து அவர்களுக்கு வேண்டியதை தரும் நாளே தைப்பொங்கல் திருநாள்.

போகிப் பண்டிகை

பயிர்கள் செழிக்கவும், உயிர்கள் வாழவும் மழை அவசியம். மழைக்கடவுளாக கருதப்படும் இந்திரனை வணங்கும் பழங்கால வழக்கம், தற்போது போகிப் பண்டிகையாக 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்ற வகையில் கொண்டாடப்படுகிறது. பொங்கலுக்கு முன்னரே வீட்டை வெள்ளையடித்துச் சுத்தம் செய்து, தேவையற்றவை என ஒதுக்கி வைக்கப்படும் பழைய பொருட்களை போகியன்று தீயிட்டுக் கொளுத்துவது வழக்கம். அப்போது குழந்தைகள் பறை என்ற சிறிய மேளத்தை வாசித்து மகிழ்வார்கள்.

ஆனால் இப்போதெல்லாம் 'டயர்'களைக் கொளுத்தி போகிப் பண்டிகை கொண்டாடும் மூடத்தனம் பரவலாக நடக்கின்றது. இதனால் காற்று மண்டலம் மாசுபடுவதோடு, மனிதர்களுக்கு பல்வேறு நோய்களும் ஏற்படுவதோடு, சுவாசக் கோளாறு உள்ளவர்களுக்கு, டயர்கள் வெளியிடும் நச்சுப்புகை மேலும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே நாம் சமுதாய அக்கறையோடும் கட்டுப்பாட்டோடும், அறிவியல் விழிப்புணர்வோடும் இருந்து, டயர்களை கொளுத்தி போகி கொண்டாடும் வழக்கத்தினை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும்.

பொங்கல் பண்டிகை

ஆடிப் பட்டத்தில் தேடி விதைத்து, விளைந்த பயிரை தை மாதம் பிறப்பதற்கு முன் அறுவடை செய்து, அந்த புத்தரிசியை மண் பானையில் வைத்து, (இதற்காகவே புதிய பானை வாங்கப்பட்டு, அதில் திருநீறும், குங்குமமும் இட்டு, அப்பானையை தெய்வீகமாகக் கருதுவது வழக்கம்) சர்க்கரைப் பொங்கல் செய்வது மரபு.

வீட்டு வாசலில் வண்ணக் கோலமிட்டு, அதன் நடுவே பொங்கல் பானையை வைத்து, பானையின் கழுத்தில் மஞ்சள் கிழங்கை இலையோடு கட்டி, மணம் பரப்பும் பொங்கல் சோறு பொங்கி எழும் போது, 'பொங்கலோ பொங்கல்' என்று கூறி மகிழ்வர் விவசாயப் பெருமக்கள். பொங்கல் பண்டிகை தரும் மகிழ்ச்சி, நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் பொதுவானதாக இன்றும் இருக்கிறது.

பூம் பூம் மாட்டுப் பொங்கல்...!

கடலூர் மாவட்டம், திட்டக்குடி தாலுக்கா, மங்களூர் ஒன்றியம், இராமநத்தம் ஊராட்சி, காந்திநகர் குடியிருப்பில் பழங்குடியினத்தவரான பூம்பூம் மாட்டுக்காரர் சமுதாயத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் பழங்குடியின பூம்பூம் மாட்டுக்காரர் இன மக்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். உழவுக்கும் கால்நடைகளுக்கும் வந்தனை செய்யும் பொங்கல் பண்டிகையை இச்சமுதாயத்தினர் தங்களின் பாரம்பரிய முறைப்படி கொண்டாடி மகிழ்கின்றனர். இவர்களின் பொங்கல் கொண்டாட்டத்தில் நரிக்குறவர் இன சமுதாயத்தினரும், ஊர் பொதுமக்களும் எவ்வித வேறுபாடுமின்றி கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பொங்கல் கொண்டாட்டம் குறித்து பூம்பூம் மாட்டுக்காரர்களின் தொழில் குருவான திரு. பொன்னுசாமி கூறும்போது, 'பொங்கல் பண்டிகை சமயத்துல எங்களோட குலதெய்வமாகிய மாயவன் மாட்டினை பூம் பூம் மாடு நன்றாக அலங்கரித்து, கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி, அணிகலன்களை அணிவிப்போம். நாங்களும் புத்தாடை அணிவோம். பிறகு எங்க குலதெய்வத்த வேண்டிக்கிட்ட அடுப்பு மூட்டி, புதுப்பானையில் பொங்கல் வைப்போம். பொங்கல் பொங்கி வழியும்போது, எங்க குலதெய்வமாகிய பூம் பூம் மாட்டினையும், சூரியனையும் வணங்குவோம். அப்போது எங்க தாய்மொழியான தெலுங்குல சாமி பாடல்களையெல்லாம் பாடுவோம். பின்னர் பொங்கலை மாட்டுக்கு படைத்து விட்டு நாங்களும் சாப்பிடுவோம், வந்துள்ள விருந்தினர்களுக்கும் கொடுப்போம், அப்போது பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளாக ஆட்டம் பாட்டம் எல்லாம் நடக்கும்' என்று குறிப்பிட்டார்.

மாட்டுப் பொங்கல்

நமது நாட்டில் செல்வத்தின் அடையாளமாக கால்நடைகள் திகழ்கின்றன. உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் கால்நடைகளுக்கு நன்றி கூறும் நாளான மாட்டுப் பொங்கலன்று கால்நடைகளைக் குளிப்பாட்டி, அவைகளுக்கு மஞ்சள் பூசி, திருநீறிட்டு, குங்குமம் வைத்து, மாலை போட்டு வணங்குவதுடன், சுவையான உணவுகளையும் படைப்பர். காளை மாடுகளுக்கு கொம்புகளில் வர்ணம் பூசி, காலில் சலங்கை கட்டி, 'வீரநடை' நடக்க வைப்பர். பல வீடுகளில் காளை மாடுகளுக்கு வண்ண துணிகளை போர்த்தி மரியாதை செய்வதும் மாட்டுப் பொங்கலின் வழக்கம்.

மதுரை மாவட்டத்தில் 'எச்சில் தண்ணீர் தெளித்தல்' என்ற ஒரு மரபு உண்டு. அதாவது மாடுகள் பொங்கல் உண்ட எச்சல் தண்ணீரை தொழுவத்தில் தெளிப்பர். இதனால் நோய்நொடிகள் அண்டாது என்பது இப்பகுதி மக்களின் நம்பிக்கை.

திருவள்ளுவர் தினம்

அனைவராலும் போற்றப்படும் தெய்வப் புலவரான திருவள்ளுவர் பெருந்தகையை சிறப்பிக்கும் வகையில் மாட்டுப் பொங்கல் தினத்தன்றே திருவள்ளுவர் தினம் கொண்டாடப்படுகிறது. உலகில் பல்வேறு தொழில்கள் மேற் கொள்ளப்பட்டாலும், ஏர்த் தொழிலின் பின்னால்தான் உலகமே நிற்கின்றது, அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது என்பதை "சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை" (குறள் 1031) என்ற குறள் நமக்கு உணர்த்துகிறது. நீதி, நேர்மை, உண்மை, துறவு, அரச நீதி, அன்பு என்று அனைத்து தன்மைகள் குறித்த செய்திகளையும் தன்னகத்தே கொண்ட சிறப்பு மிகுந்த திருக்குறளை, திருவள்ளுவர் தினத்தன்று நாமும் ஓதி, இளைய சமுதாயத்தினருக்கும் அவற்றின் பொருளை உணர்வித்து 'வள்ளுவ பூஜை'யினை மேற்கொள்ளும் நன்னெறியை தமிழர்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

காணும் பொங்கல்

'கனு பொங்கல்' என்பது பெண்கள் தங்களின் சகோதரர்களின் நலனுக்காக மேற்கொள்ளும் ஒரு விரதமாகும். அன்று காலை நீராடி, விரதமிருந்து, வெட்ட வெளியில் சூரியக் கோலமிட்டு, அதில் பொங்கல், கரும்பு போன்றவற்றை வைத்து ஆதவனுக்கு படைப்பார்கள்.

உழவர் திருநாள்

உலகிற்கே உணவளிக்கும் உழவர்களை பெருமைப்படுத்தும் நாளான உழவர் தினம், பொங்கல் பண்டிகையின் நிறைவாக கொண்டாடப்படுகிறது. இந்நாளில் உழவர் பெருமக்கள் புத்தாடை அணிந்து, சுற்றத்தாரையும், நண்பர்களையும், பார்த்து பேசி மகிழ்வது, இன்பச் சுற்றுலா செல்வது போன்ற செயல்களில் ஈடுபடுவர்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே சொந்தமும், நட்பும் அடிக்கடி சந்தித்து மகிழும் பண்பாடு இருந்தது. இன்றைய காலகட்டத்தில், வீட்டுக்கு வரும் உறவுகளையும், நட்புகளையும் பார்த்து புன்னகை புரிவது கூட அரிதான செயலாகி விட்டது. இந்த அவல நிலையை மாற்ற இந்தக் காணும் பொங்கல் நாளில் நாம் உறுதியேற்போம்.

கலைகளைப் பரப்புதல்

தற்போதைய அறிவியல் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் இல்லாத கடந்த காலங்களில், ஒரு சில குடும்பங்கள், பரம்பரை பரம்பரையாக தங்களுக்கு தெரிந்த பாரம்பரிய கலைகளை தங்களின் குடும்பத்தைச் சேர்ந்த இளைய தலைமுறையினருக்கு பயிற்றுவித்து, வழி வழியாக அந்தக் கலைகள் சென்று சேரும் விழாவாகவும் பொங்கல் விழா இருந்து வந்துள்ளது. கிராமிய இசைக்கருவிகளான தவில், நாதசுரம், பறை, உருமி, கொட்டு போன்ற வாத்தியங்களை இசைத்தல், சிலம்பாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தப்பாட்டம், கரகாட்டம் போன்ற நடனங்களை ஆடுதல், சிலேடையுடன் கூடிய பேச்சுக்கலை, நகைச்சுவை நிகழ்ச்சி என ஒவ்வொரு குடும்பத்திற்கும், அவர்கள் சார்ந்துள்ள சமூகத்திற்கும் உரிய பாரம்பரிய கலைகளை வளர்ப்பதற்காகவும் பொங்கல் பண்டிகையை காலங்காலமாக நம் முன்னோர்கள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். இதனால் பிரத்யேக கலைகள் ஒரு தலைமுறையுடன் முடிந்து விடாமல் அடுத்தடுத்த சந்ததியினருக்கும் சென்று சேர்ந்துள்ளது.

வீட்டில் உள்ள வயதான முதியவர்களான தாத்தா, பாட்டி தொடங்கி கைக்குழந்தைகள் வரை ஒரே ஊரில், ஒரே இடத்தில் கூடி பரஸ்பரம் அன்பையும், பாசத்தையும் பரிமாறிக் கொண்டு, பொங்கல் திருநாளைக் கொண்டாடி மகிழ்ந்த நிலையில் இருந்து இன்று மாறி வருகிறது. கூட்டுக் குடும்பங்களின் எண்ணிக்கை குறைந்து, தனிக் குடும்பங்கள் (கணவன், மனைவி, ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள்) பெருகி விட்ட தற்போதைய நிலையில், இன்றைய சந்ததியினருக்கு பொங்கல் பண்டிகையை ஏதாவது தென் மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்கு அழைத்துச் சென்று காண்பித்தால் மட்டுமே பொங்கல் பண்டிகையின் சிறப்புகளும், உறவின் அருமையும் தெரிய வரும். ■



தனிக் குடும்பங்கள் பெருகி விட்ட தற்போதைய நிலையில், இன்றைய சந்ததியினருக்கு பொங்கல் பண்டிகையை ஏதாவது தென் மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்கு அழைத்துச் சென்று காண்பித்தால் மட்டுமே பொங்கல் பண்டிகையின் சிறப்புகளும், உறவின் அருமையும் தெரிய வரும்.





நம் மாவட்டம்

பெரம்பலூர்

வேலை வாய்ப்பு பெறுவோம்

பெரம்பலூரில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் சார்பாக 16.11.2013 அன்று மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 1406 பெண்கள் மற்றும் 686 ஆண்கள் உட்பட 2092 பேர் கலந்து கொண்டனர்.

பிரபல பன்னாட்டு நிறுவனங்களான Apollo Pharmacy, MRF Ltd., Omega Trichy, ABT Maruthi, TVS Logistic, ATDC Perambalur, Diamond Engineering போன்ற 15க்கம் மேற்பட்ட நிறுவனங்கள் இம்முகாமில் கலந்து கொண்டு தங்கள் நிறுவனங்களுக்குத் தேவையான தகுதிபடைத்த 1046 நபர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளனர். ■

திருவண்ணாமலை

விழிப்புணர்வு ரதம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உருவாக்கப்பட்டுள்ள ரதங்களை மாவட்ட ஆட்சியர் திரு. அ. ஞானசேகரன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்த ரதங்கள் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி வருகின்றன. ■

சென்னை

வங்கி முகவர் பயிற்சி நிறைவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் இந்தியன் இன்ஸ்டியூட் ஆப் பேங்கிங் அண்ட் பைனான்ஸ் நிறுவனம் இணைந்து, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு வங்கி முகவர் பயிற்சியினை வழங்கின. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியின் நிறைவு விழாவிற்கு, இந்தியன் இன்ஸ்டியூட் ஆப் பேங்கிங் அண்ட் பைனான்ஸ் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. ஆர். பாஸ்கரன் அவர்கள் முன்னிலை வகித்தார். நபார்டு வங்கியின் பொது மேலாளர் திரு அதிர்ஷ்டவேல், துணை பொது மேலாளர் திருமதி சுசீலா சின்ட்டிலா, பாரத ஸ்டேட் வங்கியின் உதவி பொது மேலாளர் திரு தேவசேனாபதி மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி எம். மாதவி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். ■

சென்னை

இந்தியன் வங்கி கிளை திறப்பு விழா

சென்னை வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் இயங்கி வந்த நுங்கம்பாக்கம் கிளை இந்தியன் வங்கி, வள்ளுவர் கோட்டம் அருகில் இடமாற்றம் செய்யப்பட்டது. புதிய இடத்தில் இந்தியன் வங்கிக் கிளையினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி திறந்து வைத்தார்கள். இவ்விழாவில் இந்தியன் வங்கியின் உயர் அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்கி, அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இந்தியன் வங்கி இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. ■

தேனி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் விழிப்புணர்வு கருத்தரங்கு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தொடர்பாக, அனைத்துத் துறை அலுவலர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு தேனி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திரு கே.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 26.11.2013 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத் தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தமது உரையில், 'வறுமையற்ற தமிழகத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீட்டியுள்ள, 'தொலைநோக்கு திட்டம் 2023' திட்டத்தை செயல்படுத்துவதற்கு, அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்' என்று குறிப்பிட்டார். ■

புதுக்கோட்டை

புத்தாக்கப் பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தொடர்பாக மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திரு. செ. மனோகரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 22.11.2013 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியினை துவக்கி வைத்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத் தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வாழ்வாதார இயக்கத்தினை இதர தொடர்புத் துறைகளுடன் சேர்ந்து ஒருங்கிணைத்து எவ்வாறு செயல்படுவது என்பது குறித்தும், தாடர்பு துறைகள் எவ்வாறு முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்பதையும் பட விளக்க காட்சிகளாகவும் விளக்கிக் கூறினார். ■



மதுரை

விளக்கக் கூட்டம்

மதுரை மாவட்டத்திலுள்ள அனைத்து அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் வங்கியாளர்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த விளக்கக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு. இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 06.12.2013 அன்று மதுரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி. கே. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தனது உரையில், 'தமிழகத்தில் நிலவும் வறுமை நிலையைப் போக்கி, அனைத்து தரப்பு மக்களுக்கும் கல்வி, குடிநீர், சுகாதாரம், அமைதி, ஆகியவற்றை பெற்றுத் தர அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்' என குறிப்பிட்டார். ■

திருச்சி

மண்டல அளவிலான வங்கியாளர்கள் கூட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், 07.12.2013 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான வங்கியாளர்கள் கூட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்கள். இக்கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன கூடுதல் இயக்குநர் திரு. கோ. ராதா மற்றும் உதவி ஒருங்கிணைப்பாளர் (நுண்கடன்) திரு கணேஷ் கண்ணா, திருச்சிராப்பள்ளி உட்பட 9 மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் திட்ட அலுவலர்கள், முன்னோடி வங்கி மேலாளர்கள், உதவி பொதுமேலாளர் (நபார்டு) மற்றும் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் சோபனபுரம் கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக ரூ. 20 இலட்சத்திற்கான காசோலை, எரகுடி மற்றும் இ.பாதர்பேட்டை ஆகிய கூட்டமைப்புகளுக்கு தலா ரூ. 20 இலட்சம் பெருங்கடன் இசைவாணை மேலாண்மை இயக்குநரால் வழங்கப்பட்டது. ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty



மீனவர்களுக்கு குளிர்பதனப் பெட்டி வழங்குதல்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து மேம்படுத்த, சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும், குளிர்சாதனப் பெட்டி (Ice Box) வழங்கும் திட்டம் சிறப்பானதாகும்.

கடற்கலைப் பகுதியில் வசிக்கும் மீனவர்களின் வாழ்வாதாரமே மீன் பிடித்தொழில்தான். கடலுக்குள் சென்று நெடுநேரம் மீன் பிடித்த பின் மீனவர்கள் கரைக்கு திரும்ப குறைந்தபட்சம் 12 மணி நேரத் திற்கு மேல் ஆகும். அவர்கள் பிடிக்கும் மீன்களை பாதுகாப்பாக வைப்பதற்கு வாய்ப்பு இல்லாததால், அவர்களால் பிடிக்கப்படும் மீன்களின் தரம் குறைந்து விடுகின்றது. இதனால் அதிக மதிப்புள்ள மீன்கள் கூட மிகக் குறைந்த விலைக்கே விற்கப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது.

கரை சேர்ந்த பின், இந்த மீன்களை மீனவ பெண்கள் கூடைகளில் கொண்டு சென்று விற்கும் போது அன்றைய தினம் விற்கப்படாத மீன்கள் மேலும் கெட்டுப் போய் விடுகின்றன. இதனால் கடலில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்களுக்கும், விற்பனை செய்யும் மீனவப் பெண்களுக்கும் நியாயமான வருவாய் கிடைப்பதில்லை.

இப்பிரச்சனைக்குத் தீர்வு கண்டிடவும், மீன்களின் தரம் குறையாமல் இருப்பதற்கும், மீன் விற்பனை சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள சுமார் 5422 மீனவர்களுக்கு ரூ. 195.19 இலட்சம் மதிப்பீட்டில் 100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குளிர் பதனப் பெட்டிகளும் (Ice Box), மீனவப் பெண்களுக்கு

கடலில் நெடுநேரம் மீன் பிடித்த பின் மீனவர்கள் கரைக்கு திரும்ப குறைந்தபட்சம் 12 மணி நேரத்திற்கு மேல் ஆவதால் பிடிக்கப்பட்ட மீன்களின் தரம் குறைந்து விடுகின்றது.

ரூ. 6.59 இலட்சம் மதிப்பீட்டில் 70 லிட்டர் கொள்ளளவு கொண்ட குளிர்பதனப் பெட்டிகளும் வழங்கப்பட்டுள்ளது. மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்கள் இந்தப் குளிர்பதனப் பெட்டிகளில் பாதுகாப்பாக வைக்கப்படுவதால் அவைகள் தரம் குறைவதில்லை. இதனால் மீன்கள் அன்றைய தினமே விற்காவிட்டாலும், அவை குளிர்பதனப் பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு மறுநாள் சந்தைப்படுத்த பெரிதும் உதவியாக உள்ளது. மீனவர்களும் தரமான மீன்களை சரியான விலைக்கு விற்று பயன் பெறுகின்றனர். குளிர் பதனப் பெட்டியில் வைக்கப்படும் மீன்கள் 3 முதல் 5 நாட்கள் வரை கெடாமல் இருப்பதால் மீன்களுக்கு நியாயமான விலை கிடைப்பதாக மீனவர்களும், மீனவர் பெண்களும் கூறுகின்றனர். ■



மணிமேகலை விருது பெற்ற சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

5422 மீனவர்களுக்கு ரூ. 195.19 இலட்சம் மதிப்பீட்டில் 100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குளிர் பதனப் பெட்டிகளும் மீனவப் பெண்களுக்கு ரூ. 6.59 இலட்சம் மதிப்பீட்டில் 70 லிட்டர் கொள்ளளவு கொண்ட குளிர் பதனப் பெட்டிகளும் தரப்பட்டுள்ளன

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டாரம், புதுப்பட்டினம் கிராமத்தில் உள்ள 47 குழுக்கள் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் மறுசீரமைக்கப்பட்ட பின், அவற்றுக்கு மொத்தம் ரூ. 1,56,50,000/– வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 76 உறுப்பினர்கள் தையல் நிறுவனம், மளிகைக் கடை, பழச்சாறு கடை, துரித உணவகம் ஆகிய குறுந்தொழில்கள் மேற்கொண்டு பயனடைந்து வருகின்றனர். சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் காப்பீடு பயிற்சிகள் அளிக்கப்பட்டதின் பயனாக அனைத்து குழு உறுப்பினர்களும், காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர். மருத்துவக் காப்பீட்டில் 714 உறுப்பினர்களும், தனி நபர் விபத்துக் காப்பீட்டில் 773 உறுப்பினர்களும், வீடு காப்பீட்டில் 464 உறுப்பினர்களும் சேர்ந்துள்ளனர். அதன் மூலம் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பிற்கு சேவைக் கட்டணமாக ரூ. 10,820/– கிடைத்து வருகிறது. கோழிப்பண்ணை, ஜெராக்ஸ் கடை, அழகுக்கலை நிலையம் ஆகிய குறுந்தொழில்களும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

புதுப்பட்டினம் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு தையல் பயிற்சி, மீன் பதப்படுத்துதல், காய் கனி வளர்த்தல், கறவை மாடு வளர்த்தல், சுய உதவிக் குழு உறுப்பினர் பயிற்சி, கணினி பயிற்சி, செவிலியர் பயிற்சி மற்றும் தோல் பைகள் தயாரிக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. துயர் குறைப்பு நிதி மூலம் மொத்தம் 194 உறுப்பினர்களுக்கு ரூபாய் 9,67,000/– குறைந்த வட்டியில் கடன் கொடுக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் சிறந்த கூட்டமைப்பாக புதுப்பட்டினம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு தேர்வு செய்யப்பட்டு, தமிழக அரசின் ‘மணிமேகலை விருது’ பெற்றுள்ளது. அதற்கான ஊக்கத் தொகை ஒரு இலட்சம் ரூபாயும் இந்தக் கூட்டமைப்பிற்கு கிடைத்துள்ளது. ■

கன்னியாகுமரியில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகள் விற்பனை மற்றும் கண்காட்சி

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தில் குறுந்தொழில் வளர்ச்சி பணியானது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வளங்களை முழுமையாக கண்டறிந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மக்களின் வருவாயை பெருக்கிடும் பொருட்டு சுய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன், சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அங்கீகாரம் அவர்களுக்கு கிடைத்திட எவ்வித பாகுபாடு இன்றி அனைவரும் அனைத்து தொழில்களிலும்ஈடுபடசெய்வதேகுறுந்தொழில் முனைவதின் நோக்கமாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 ஊராட்சிகளிலும் தொழிலுக்கான வளங்கள் கிடைக்கும் வாய்ப்பு, தொழில் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான விற்பனை வாய்ப்பு, சந்தைப்படுத்துதல் மற்றும் இலாப வாய்ப்புகளை கணக்கிட்டு, தகுந்த பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு, கடந்த இரண்டு வருடங்களாக 44 குறுந்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு அவை வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் தொழிலில் ஈடுபடும் முனைப்புடைய பயனாளிகளை கண்டறிந்து, அவர்களுக்கு தகுந்த பயிற்சிகள் வழங்கி தொழில் துவங்கிட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

துரித உணவகம், ஊறுகாய் தயாரித்தல், சிப்பி கைவினைப் பொருட்கள் தயாரித்தல், உலர் மீன் விற்பனை, கோழிப்பண்ணை, முயல் வளர்த்தல், சோபா தயார் செய்தல், ஐஸ் தயாரித்தல், பேக்கரி, வலை பின்னுதல், மளிகை வியாபாரம், படகு இயந்திர பழுது நீக்குதல் மையம், காலணி தயாரித்தல், மீன்பிடி உபகரணங்கள் விற்பனை போன்ற குறுந்தொழில் மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு நாளது வரை இலாபத்துடனும், வெற்றிகரமாகவும் இயங்கி வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட குறுந்தொழில் நிறுவனங்கள்மூலம் 140 பயனாளிகளும், அவர்களது குடும்பங்களும் பயன் பெற்றதுடன், அவர்கள் வாழ்க்கை தரமும் உயர்ந்துள்ளது. மேலும் குறுந்தொழில் மேம்பாட்டு பணியினை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தும் பொருட்டு திட்ட இயக்குநர், கூடுதல் இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் கள ஆய்வு பணிகள் மேற் கொள்வதுடன், மாதாந்திர ஆய்வு கூட்டம் நடத்தி கண்காணித்து தகுந்த ஆலோசனைகளும் வழங்கி வருகிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 29.11.2013 முதல் 20.01.2014 முடிய திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரித்த பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சி நடைபெற்று வருகிறது. தற்போது திருவிழா காலம் என்பதால் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் இந்த விற்பனை மற்றும் கண்காட்சிக்கு வருகை தந்து தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்கிச் செல்கிறார்கள்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் இந்த விற்பனை மற்றும் கண்காட்சியானது சுனாமியால் நேரடியாக அல்லது மறைமுகமாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முக்கிய பங்கு வகிக்கிறது என்பதில் எந்த ஐயமும் இல்லை. ■

மீனவர்களின் நலனுக்காக மீன் விற்பனைச் சங்கங்கள்

சுனாமியால் அதிக அளவில் பாதிக்கப்பட்ட ஆறு கடலோர மாவட்டங்களில் வாழும் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திடவும், மேம்படுத்தவும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், தென் இந்திய மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு உதவியுடன் இதுவரை 44 மீன் விற்பனை சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வாழ்வாதாரத் திட்டம் எங்கள் பகுதியில் மீன் விற்பனை சங்கத்தை 2009ஆம் ஆண்டு உருவாக்கி பல நல திட்டங்களை மக்களுக்கு செய்தனர். எங்கள் சங்கத்திற்கு தனி கட்டிடம் மற்றும் கணினி, பிரிண்டர் உள்பட பல உபகரணங்கள் வழங்கி, நல்ல முறையில் சங்கம் செயல்பட உதவி வருகின்றனர். எங்கள் சங்கத்தில் 60 உறுப்பினர்கள் உள்ளனர். சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் சுமார் 20 இலட்சம் கடன் மீட்புத் தொகையாக வழங்கியுள்ளனர்.

இந்த மீன் விற்பனை சங்கங்களில் அப்பகுதியில் உள்ள மீன்பிடி தொழில் செய்யும் மீனவர்களை உறுப்பினர்களாக இணைத்து, அவர்களுக்கு கடன் மீட்புத் தொகையாக ரூ. 224.29 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் பிடிக்கும் மீன்கள் சரியான விலைக்கு விற்க ஏற்பாடு செய்து தரப்படுகின்றது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள 44 மீன் விற்பனை சங்கங்களும் சிறப்பாக செயல்படுகின்றது. அவற்றில் ஒன்று, நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள வெள்ளபள்ளம் மீன் விற்பனை சங்கமும் ஒன்றாகும்.

வெள்ளபள்ளம் மீன் விற்பனை சங்கம் பற்றி அதன் தலைவர் சண்முகவேல் கூறும்போது, 'நான் வெள்ளபள்ளம் மீன் விற்பனை சங்கத் தலைவராக உள்ளேன். 2004ஆம் ஆண்டு சுனாமியின் போது தமிழகத்திலேயே எங்கள் நாகப்பட்டினம் மாவட்டம் தான் பெரிதும் பாதிக்கப்பட்டது. சுமார் 6000 பேர் உயிரிழந்தனர். சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த

ஒவ்வொரு மீன் விற்பனை சங்கத்திற்கும் தலா ரூ. 9.5 இலட்சம் செலவில் கட்டிடங்கள், கணினி, பிரிண்டர், எடைபோடும் கருவிகள், ஐந்தாயிரம் லிட்டர் குளிர்சாதனப் பெட்டி மற்றும் இதர பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன் தொகையை தேவைப்படும் உறுப்பினர் களுக்கு அளித்து அவர்களுக்கு கிடைக்கும் இலாபத்தில் அதனை திரும்ப செலுத்த ஏற்பாடு செய்துள்ளோம். சுனாமியால் வாழ்க்கையை இழந்த எங்களுக்கு மறுவாழ்வு அளித்து, எங்கள் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்து வரும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளோம்' என்று சொல்கிறார். ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

திரு. **விக்ரம் கபூர்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்

திரு. A. R. கிளாஸ்டோன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

முற்றக் கச்சேரி

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி குறித்து மகளிர் சுய உதவிக் குழுவின் ஊக்குநர் செல்லாயி, உறுப்பினர்கள் வாணி, பார்வதி மற்றும் சிறப்புக்குழு ஒருங்கிணைப்பாளர் சுபா ஆகியோர் விவாதிக்கிறார்கள்.

செல்லாயி : வாங்க சுபா... சென்னைக்கு என்ன விசயமா போனீங்க?

சுபா : அங்க நம்ம சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யற பொருட்களோட விற்பனைக் கண்காட்சி நடக்குது. அதுக்காகத்தான் சென்னைக்கு போயிருந்தேன்.

செல்லாயி : சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யற பொருட்களோட விற்பனைக் கண்காட்சியா நடக்குது?

சுபா : ஆமாம். சுய உதவிக் குழுக்களோட வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும், நம்ம மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பதற்காக பலவிதமான கண்காட்சிகளை நடத்த

பார்வதி: பரவாயில்லையே... அதனால சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்கம் கிடைக்கும் தானே?

சுபா: ஆமா. ஊக்கம் கிடைப்பது மட்டும் இல்லாமல், அவர்களோட திறமையை வெளிப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாகவும் இந்தக் கண்காட்சிகள் இருக்குது.

செல்லாயி: நம்ம மாநிலத்தில மட்டும்தான் இந்தக் கண்காட்சி நடக்குதா?

சுபா: மாநில அளவிலா இந்தக் கண்காட்சியும், அனைத்து இந்திய அளவுல 'சாராஸ்' கண்காட்சியும் நடக்கும்.

பார்வதி: சமீபத்துல கூட திருநெல்வேலியில சாராஸ் கண்காட்சிதான் நடந்தது...

சுபா: ஆமாம்... திருநெல்வேலி, பாளையங்கோட்டை நேருஜி மைதானத்துல 20.11.2013 முதல் 29.11.2013 வரை நடந்த சாராஸ் கண்காட்சியில குஜராத், கர்நாடகா, பாண்டிச்சேரி, மகாராஷ்ட்ரா, உத்தரபிரதேசம், ஆந்திரா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்களும், தமிழகத்தின் அனைத்து மாவட்டத்தில் செயல்படும் குழுக்களும் கலந்து கொண்டு தங்களோட உற்பத்திப் பொருட்கள விற்பனை செஞ்சாங்க.

உத்தரவு போட்டுள்ளாங்க. அந்த உத்தரபடி அனைத்து மாவட்டங்களிலும் விற்பனைக் கண்காட்சிகள் நடக்குது. நம்ம சென்னையில மகளிர் மேளா 2014 கிருஸ்துமஸ் – புத்தாண்டு – பொங்கல் விற்பனைக் கண்காட்சி நடக்குது.

வாணி : எங்க இந்தக் கண்காட்சி நடக்குது?

சுபா : 20.12.2013 முதல் 19.01.2014 வரை சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்துல இந்தக் கண்காட்சி நடக்குது.

வாணி: இந்தக் கண்காட்சியில யாரெல்லாம் கலந்துக்குவாங்க?

சுபா: மகளிர் திட்டத்தை சேர்ந்த குழுக்கள் மட்டுல்லாமல், புதுவாழ்வு திட்டம், சுனாமிக்குப் பின்னர் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் ஆகியவற்றின் கீழ் செயல்படும் குழுக்கள் மட்டுமல்லாமல், மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர் போன்றவர்களும் தங்களின்உற்பத்திப்பொருட்களஇந்தக்கண்காட்சியில விற்பனை செய்யறாங்க.

பார்வதி: சாராஸ் கண்காட்சியால என்ன நன்மை?

சுபா: என்ன இப்படி கேட்டுட்ட? நம்ம நாட்டுல இருக்கிற பல்வேறு மாநிலங்களோட கலாச்சாரத்தைப் பத்தியும், அவங்க தயாரிக்கிற பொருட்கள பத்தியும் எல்லோரும் தெரிஞ்சிக்க இந்தக் கண்காட்சி கள் நல்ல வாய்ப்ப ஏற்படுத்தி தருது. அதோட மட்டுமில்லாம நம்ம ஊரு சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கிற பொருள்களுக்கு சந்தை வாய்ப்பும் கிடைக்குது.

வாணி: நம்ம மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கு நல்ல நல்ல திட்டங்கள தீட்டி செயல்படுத்தி வராங்க. அவங்களுக்கு நாம முதல்ல நன்றி சொல்லணும்.

செல்லாயி: அதோட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துக்கும், புதுவாழ்வு திட்டத்திற்கும் நன்றி சொல்லணும்... சரியா?

சுபா: ரொம்ப சரி... நான் வரட்டுமா? அடுத்த முறை வேற விஷயம் குறித்து பேசுவோம்.

(சுபா விடைபெற்று செல்ல... செல்லாயி, வாணி மற்றும் பார்வதி ஆகியோர் வீட்டிற்கு செல்கின்றனர்.) ■

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

புது வாழ்வு திட்டம்

மாற்றுத் திறனாளிகளின் திறமைகளை வளப்படுத்தும் படிக்கல்லாக இருந்து, அவர்களை முறைப்படி வழி நடத்தி, மாற்றுத் திறனாளிகளாலும் சாதனைகள் படைக்க முடியும் என்பதை புதுவாழ்வு திட்டம் நிரூபித்துக் காட்டியுள்ளது.

பக்கம்...28

‘பொம்பளையா இவள்’னு பேசினவங்க, ‘பொம்பளைன்னா ராசாத்தி மாதிரி இருக்கணும்’னு சொல்ற நிலைமை வந்தப்பதான் என் கண்ல சந்தோஷக் கண்ணீர் வந்துச்சு. எல்லாத்துக்கும் புதுவாழ்வு திட்டம்தான் காரணம்.

பக்கம்...29

கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் நலிந்தோர் தனிநபர் கடனுதவியாக ரூ. 10 ஆயிரம் பெற்ற சோபியா, கறவை மாடு வாங்கி வளர்த்து வருவதன் மூலம் தற்போது கணிசமான வருவாய் பெற்று வறுமையில் இருந்து விடுபட்டுள்ளார்.

பக்கம்...32

உணவுக் கலப்படம்

நாம் வாங்கும் பொருட்கள் மற்றும் நுகரும் பொருட்கள் மீது அக்கறைக் கொள்வோம்!

மாவட்டங்களில் மாற்றுத் திறனாளிகள் தின விழா கொண்டாட்டம் - 2013

விருதுநகர்

விருதுநகர் மாவட்ட புதுவாழ்வு திட்டம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை இணைந்து நடத்திய 'மாற்றுத் திறனாளிகள் தினவிழா – 2013' டிசம்பர் 3ஆம் தேதியன்று விருதுநகர் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற 67 மாற்றுத் திறனாளிகளுக்கு விருதுநகர் மாவட்ட ஆட்சியர் திரு. த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கி வாழ்த்தியதுடன், ஊனமுற்ற, மன நலம் குன்றியவர்களுக்கு 3 சக்கர சைக்கிள்கள் மற்றும் சக்கர நாற்காலிகளையும் வழங்கினார். இவ்விழாவில் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறன் படைத்தோருக்கான சிறப்பு பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

உடலில் ஊனமிருந்தாலும், உற்சாகத்துடன் அனைத்து போட்டிகளிலும் பங்கு கொண்டு வெற்றிகளை பெற்ற மாற்றுத் திறனாளிகள், வாய்ப்பு கிடைத்தால் சாதனைகள் பலவற்றையும் படைப்பார்கள் என்பதை உலகிற்கு உணர்த்தியுள்ளனர்.

புதுக்கோட்டை

மாற்றுத் திறனாளிகளின் திறமையை வெளிக்கொணரும் வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் தின விழா 2013 டிசம்பர் 3ஆம் தேதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவினை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள். மாவட்ட புதுவாழ்வுத் திட்ட மேலாளர் வரவேற்புரையாற்றினார். மாவட்ட ஊராட்சி வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. இரா. சக்திவேல், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ஆ. மாரிமுத்து, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் திரு அ.மு.கருணாகர பாண்டியன் உட்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

திண்டுக்கல்

விளையாட்டுத் துறையில் மாற்றுத் திறனாளிகள் சாதனைகள் படைக்கும்வகையில்புதுவாழ்வுதிட்டம்திண்டுக்கல்மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான நீச்சல் பயிற்சியினை நடத்தியது. 22 நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சியில் 9 மாவட்டங்களிலிருந்து 32 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். பயிற்சியில் கலந்து கொண்ட மாற்றுத் திறனாளிகள் பெங்களூருவில் நடைபெற்ற தேசிய போட்டியில் கலந்து கொண்டு 2 தங்கம், 7 வெள்ளி, 12 வெண்கலம் உட்பட 21 பதக்கங்களை வென்றனர். மாற்றுத் திறனாளிகளின் திறமைகளை வளப்படுத்தும் படிக்கல்லாக இருந்து, அவர்களை முறைப்படி வழி நடத்தி, மாற்றுத் திறனாளிகளாலும் சாதனைகள் படைக்க முடியும் என்பதை புதுவாழ்வு திட்டம் நிரூபித்துக் காட்டியுள்ளது.

கரூர்

கரூர் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் தின விழா கரூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. ச. ஜெயந்தி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் நடத்தப்பட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளின் மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும், சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சியர் வழங்கினார். கரூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி திருவர்ச்செல்வி, புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. ம. ரூபவேல், உதவித் திட்ட மேலாளர் திரு கே. குமாரசாமி உட்பட ஏராளமானவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

எல்லோருக்கும் என்னோட பணத்தைப் போட்டு, அவங்கள வைச்சி குழுவை ஆரம்பிச்சேன்.

புதுவாழ்வு தந்த

புது கௌரவம்!

ஆரம்பத்துல எங்கிட்ட குழுவே இல்லை. அப்புறம் நான் யாருக்குப் பிரதிநிதியா இருக்கிறது? என்னுடைய கேள்விக்கு 'உங்க ஊர்ல நீங்களே குழு ஆரம்பிச்சிடுங்க'ன்னு பதில் சொன்னாங்க. குழுவுலயே என்னை சேர்த்துக்க தயாரா இல்லை, அதுல என்னுடைய குழுவுல யார் வந்து சேரப்போறாங்க? எது யாரோட வீடுன்னே எனக்குத் தெரியாது. ஆனாலும் பின்வாங்காம எல்லா வீட்டுக் கதவையும் தட்டினேன். பெரும்பாலானவங்க கண்டுக்கவே இல்லை.

புதுவாழ்வு திட்டத்தால தனக்கு புதுகௌரவம் கிடைத்துள்ளதாக சொல்லும் ராசாத்தியின் வெற்றிக் கதை தொடர்ச்சி....

புது வாழ்வு திட்டத்துல இணைஞ்சது எப்படி?

'நான் தப்பானவ இல்லை'ன்னு ஊர் பொம்பளைங்களுக்கு புரிய வச்சுட்டா அப்புறம் எல்லாம் சரியா போயிடும்னு தோணிச்சு. அதுக்கான ஒரு வாய்ப்பா ஏற்கனவே ஊர்ல இருக்கிற மகளிர் குழுவுல என்னையும் ஒரு உறுப்பினரா சேர்த்துக்க முடியுமான்னு கேட்டேன். என்னை கேவலமா பார்த்துட்டு, பதில் சொல்லாம போயிட்டாங்க. நான் மரியாதையா வாழ விரும்பறேன்னு தெரிஞ்சுக்கிட்ட ஊர்த் தலைவர், கொஞ்ச நாள் கழிச்சி 'புதுவாழ்வுன்னு ஒரு திட்டம் வந்திருக்காம். அதுக்கு பக்கத்து ஊர்ல ஒரு வாரம் பயிற்சி தராங்க, நீ போயிட்டு வா'ன்னு சொன்னாரு. நானும் பயிற்சியில கலந்துகிட்டேன். பயிற்சி முடிந்ததும் 'நீங்கள் எல்லாம் இப்போ ட்ரெயின் ஆகிட்டீங்க. உங்க குழுவுக்கு நீங்கதான் பிரதிநிதி'ன்னு என்கிட்ட சொன்ன பிறகுதான், அது குழுப் பிரதிநிதிக்கான பயிற்சின்னு புரிஞ்சது.

முதன் முதலா நீங்க ஆரம்பிச்ச குழு குறித்து...

எங்கிட்ட குழுவே இல்லை. அப்புறம் நான் யாருக்குப் பிரதிநிதியா இருக்கிறது? என்னுடைய கேள்விக்கு 'உங்க ஊர்ல நீங்களே குழு ஆரம்பிச்சிடுங்க'ன்னு பதில் சொன்னாங்க. குழுவுலயே என்னை சேர்த்துக்க தயாரா இல்லை, அதுல என்னுடைய குழுவுல யார் வந்து சேரப்போறாங்க? எது யாரோட வீடுன்னே எனக்குத் தெரியாது. ஆனாலும் பின்வாங்காம எல்லா வீட்டுக் கதவையும் தட்டினேன்.

எதிர்ப்புக்கு இடையிலேயும் சாதிச்சது எப்படி?

பணமே போடாதவங்களுக்கு என்னோட சேமிப்புல இருந்து பணம் தந்தேன். ஆரம்பத்துல என்கிட்ட பேசவே மாட்டேன்னு இருந்தவங்க, 'உனக்கு தெரிஞ்ச பொம்பளைங்களை மட்டும் சேர்த்துக்கிட்டு பணம் வாங்கித் தர்றீயா?'ன்னு உரிமையா சண்டைக்கு வந்தாங்க. எல்லோரும் என்கிட்ட நல்லா பழக ஆரம்பிச்சாங்க. என்னை எதிரியா பார்த்தவங்க அத்தனை பேருக்கும் என்னால உதவி செய்ய முடிஞ்சது.

உங்க வெற்றிக்கு காரணமான புதுவாழ்வு திட்டம் பற்றி...

'பொம்பளையா இவள்'னு பேசினவங்க, 'பொம்பளைன்னா ராசாத்தி மாதிரி இருக்கணும்'னு சொல்ற நிலைமை வந்தப்பதான் என் கண்ல சந்தோஷக் கண்ணீர் வந்துச்சு. எல்லாத்துக்கும் புதுவாழ்வு திட்டம்தான் காரணம்.

இத்தனை ஆண்டு கால போராட்டத்தில், அவதூறுகளை வென்று, 'சிறந்த பெண்மணி' என்கிற அடையாளத்தை உருவாக்கி இருக்கும் ராசாத்தியை சொந்த ஊருக்கு அழைக்கிறார்கள் பிள்ளைகள்.

'எங்கோ சாக இருந்தவளுக்கு, இத்தனை நாளா இடம் கொடுத்து வாழ வச்ச ஊருதான் என் சொந்த ஊரு' என்று திம்மலை கிராமத்திலேயே தங்கி இருக்கிறார் ராசாத்தி. அறியாமையினாலும் அடக்குமுறையாலும் சுயசார்பு இழந்து நிற்கும் பெண்களுக்கு தன்னம்பிக்கையை ஊட்டி, அவர்களின் வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்தி வரும் புதுவாழ்வு திட்டத்தின் வெற்றிக்கு ராசாத்தி போன்ற பெண்களே சான்றாக இருக்கிறார்கள். ■

மகளிர் வங்கியின் முதல் பெண் நிர்வாகி

பெண்களுக்காகவே செயல்படும் மகளிர் வங்கி நவம்பர் 19, 2013 அன்று மும்பையில் துவக்கப்பட்டது. நாட்டின் முக்கிய நகரங்களில் செயல்படும் இவ்வங்கி, நம் தமிழ்நாட்டில் சென்னை அன்னாசாலையில் செயல்படுகிறது.

மகளிர் வங்கியின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக திருமதி. உஷா அனந்தசுப்பிரமணியன் அவர்கள் பொறுப்பேற்றுள்ளது பெண்கள் அனைவருக்கும் பெருமை அளிக்கக் கூடிய செய்தியாகும்.

திருமதி. உஷா அனந்தசுப்பிரமணியன், சென்னை பல்கலைக் கழகத்தில் புள்ளியலில் முதுகலைப் பட்டமும், மும்பை பல்கலைக் கழகத்தில் இந்திய கலாச்சாரம் குறித்த படிப்பில் முதுகலைப் பட்டமும் பெற்றவர்.

இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் 1982ஆம் ஆண்டு பணிக்கு சேர்ந்த திருமதி. உஷா அனந்தசுப்ரமணியன், பரோடா வங்கி உள்ளிட்ட பல்வேறு வங்கிகளில் முக்கிய பதவிகளை வகித்து வந்துள்ளார்.

மகளிர் வங்கியின் தலைவர் பதவியை ஏற்கும் முன் பஞ்சாப் நேஷனல் வங்கியின் செயல் இயக்குநராக பதவி வகித்து வந்தார்.

வங்கித் துறையில் சிறப்பான அனுபவத்தை பெற்று, வங்கிகளின் வளர்ச்சிக்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, இன்று நாட்டின் முதல் மகளிர் வங்கியின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக பொறுப்பேற்றுள்ள திருமதி. உஷா அனந்தசுப்பிரமணியன் அவர்களின் கணவர் திரு. அனந்தசுப்பிரமணியன் அவர்கள், Institue of Company Secretaries of India என்ற நிறுவனத்தின் தலைவராக பதவி வகித்து வருகிறார். ■

உத்தரபிரதேசம், பீகார், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் சமூக வல்லுநர்களும் தங்கள் மாநிலத்தில் மக்கள் நிலை ஆய்வை செயல்படுத்துவதற்கு புதுவாழ்வு திட்ட வழிமுறைகளையே பின்பற்ற உள்ளதாக தெரிவித்தனர்.

நாட்டிற்கே முன்னோடியான புதுவாழ்வு திட்டம்

இமாச்சல பிரதேச மாநிலம், சிம்லாவில் மாநில அளவிலான தேசிய ஊரக வாழ்வாதார இயக்க கருத்தரங்கு நடைபெற்றது. புதுவாழ்வு திட்ட மாநில திட்ட இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கிருஷ்ணகிரி மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு ஜி. குமரன் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட மக்கள் கற்றல் மையத்தின் சார்பாக சமூக வல்லுனர் திருமதி கீதா ஆகிய இருவரும் கலந்து கொண்டனர்.

இமாச்சல பிரதேச மாநில பொது நிர்வாகத்துறை பயிற்சி மையத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், அம்மாநிலத்தின் ஊரக வளர்ச்சித் துறையின் முதன்மை செயலர் திருமதி. உமா சவுத்திரி, இ.ஆ.ப., மற்றும் இமாச்சல பிரதேச மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை அலுவலர் திரு ராஜீவ் சர்மா ஆகியோரும், மாவட்ட அளவிலான திட்ட அலுவலர்கள் உட்பட சுமார் 120 பேரும் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் பேசிய இமாச்சல பிரதேச ஊரக வளர்ச்சித்துறையின் முதன்மை செயலர் பேசும்போது, 'தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் புதுவாழ்வுத் திட்டப் பணிகள் சிறப்பாக உள்ளன என்று பாராட்டியதுடன், மக்கள் நிலை ஆய்வில் நாட்டிற்கே தமிழக புதுவாழ்வுதிட்டம்தான் முன்னோடியாக உள்ளது என்றும் எடுத்துரைத்ததுடன், இமாச்சல பிரதேசத்திலிருந்து மேலும் ஒரு குழுவை மக்கள் நிலை ஆய்வு குறித்து அறிந்து கொள்ள விரைவில் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைப்பதாக தெரிவித்தார். ■

உணவுக் கலப்படம் - நாம் வாங்கும் பொருட்கள் மற்றும் நுகரும் பொருட்கள் மீது அக்கறைக் கொள்வோம்!

உணவுக் கலப்படத்தை கண்டறிவதற்கான சில எளிய பரிசோதனைகள்

வ.எண்	உணவுப் பொருள்	கலப்படப் பொருள்	பரிசோதனை
1	மஞ்சள், பருப்புகள் மற்றும் கொண்டைக் கடலை அல்லது சுண்டல் கடலை போன்ற கடலைகள்	மெடனில் மஞ்சள் மற்றும் கேசரி பருப்பு (உணவுப் பொருளின் மஞ்சள் நிறத்தைக் கூட்டுவதற்காக சேர்க்கப்படுகிறது)	அரைத் தேக்கரண்டி பேசன் அல்லது மஞ்சள் பொடியை 20 மில்லி இளஞ்சூடான நீரில் கரைக்கவும். சிறிதளவு எலுமிச்சை அல்லது பொதுவாக கிடைக்கும் அமிலத்தை சேர்க்கவும். நீர் இளஞ்சிவப்பாக மாறினால், அது மெடனில் மஞ்சள் இருப்பதை காட்டுகிறது.
2	பச்சை மிளகாய், பச்சைப் பட்டாணி மற்றும் பிற காய்கறிகள்	மலக்கைற்று பச்சை (காய்கறிகளின் ஒளிரும், பளபளக்கும் பச்சை நிறத்தை கொடுக்க பயன்படுத்தப்படுகிறது)	ஒரு பகுதியை நீரில் ஊற வைக்கவும். நீரின் நிறம் ம றினால் மலக்கைற்று பச்சை இருப்பதை குறிக்கும்.
3	கடுகு மற்றும் கடுகு எண்ணெய்	பிரம்மத்தண்டு விதைகள் (அளவு ம ற்றும் எடையைக் கூட்டுவதற்காக)	உடைத்தால், பிரம்மதண்டு விதைகள் உள்ளே வெள்ளையாகவும், வெளியே கரகரப்பாகவும் இருக்கும். கடுகு வெளியே மென்மையாகவும், உள்ளே மஞ்சளாகவும் இருக்கும்.
4	பால்	தண்ணீர்	ஒரு துளி பாலை ஒரு கண்ணாடி தட்டில் எடுத்துக் கொண்டு அதை செங்குத்தாக பிடிக்கவும். பால் தட்டில் ஒரு ஒரு வெள்ளை அடையாளத்தை விட்டு ஓடினாலோ அல்லது மெது வாக விழுந்தாலோ பால் தூய்மை யானது. பால் விரைவாக விழுந்து தட்டிலிருந்து வேக மாக ஓடினாலே, வெள்ளை அடையாளத்தை ஏற்படுத்தவில்லையென்றாலோ பாலில் தண்ணீர் கலந்துள்ளது என்பதை தெரிந்து கொள்ளலாம்.
5	கருப்பு மிளகு	பப்பாளி விதைகள் (அளவை அதிகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது)	ஆல்கஹாலில் மாதிரியை மிதக்க விடவும். முதிர்ந்த கருமிளகு முத்துக்கள் நீரில் மூழ்கி விடும். ஆனால் பப்பாளி விதைகள் நீரில் மிதக்கும்.

உள்ளூரில் விளைந்த பாதுகாப்பான உணவை சாப்பிடுங்கள்

உள்ளூரில் விளைந்த காய்கறிகள், பழங்கள் மற்றும் பால் போன்றவை பெரும்பாலும் மாசுபடாமலும், வேண்டுமென்றே கலப்படம் செய்யப்படாமலும் இருக்கும். எனவே ஊரகப் பகுதிகளில் இருக்கும் சொந்த நிலத்தில் உணவு பயிரிடும் மக்கள் தங்கள் தேவைகளுக்குப் போக மீதமுள்ளதை விற்பனை செய்வதை உறுதி செய்ய வேண்டும். மேலும் பருப்பு, கடலைகள் மற்றும் பிற தானியங்களை பிற உள்ளூர் விவசாயிகளிடமிருந்தும் வாங்கலாம். உள்ளூரில் விளைந்த உணவுப் பொருட்களைப் பயன்படுத்துவது, உணவு கலப்படம் மற்றும் மாசு படுவதற்கான ஆபத்திலிருந்து நம்மை காப்பாற்றும். ■

திட்ட இயக்குநர் ஆய்வு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிலாப்பூர், ஊரப்பாக்கம் மற்றும் படப்பை ஆகிய பகுதிகளில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை திட்ட இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் 04.12.2013 அன்று ஆய்வு செய்தார். பிலாப்பூர் ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள பால் உற்பத்தியாளர் ஒத்த தொழில் குழுவின் செயல்பாடுகளை ஆய்வு செய்த திட்ட இயக்குநர், மேலும் சிறப்பாக செயல்படத் தேவையான ஆலோசனைகளை வழங்கினார். பின்னர் ஊரப்பாக்கத்தில் செயல்படும் மக்கள் கற்றல் மையத்தினை பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்த ஆய்வு செய்தார்.

படப்பை ஊராட்சியில் புதுவாழ்வு திட்டம் மற்றும் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான பகல் நேர பராமரிப்பு மையத்தை பார்வையிட்டு, அங்கு அமைக்கப்பட்டுள்ள பயிற்சி சாதனங்களை குறித்து ஆய்வு செய்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். ■

கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் நலிந்தோர் தனிநபர் கடனுதவியாக ரூ. 10 ஆயிரம் பெற்ற சோபியா, கறவை மாடு வாங்கி வளர்த்து வருகிறார். இதன் மூலம் தற்போது கணிசமான வருவாய் பெற்று வறுமையில் இருந்து விடுபட்டு வளமான வாழ்க்கையை பெற்றுள்ளார்.

கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு பயிற்சி தொகை

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் ஊராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள சமூக அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்பு சங்கம், சுய உதவிக் குழுக்கள், சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுனர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு பல்வேறு விதமான பயிற்சிகள் அளிக்க புதுவாழ்வு திட்டத்தின் மூலம் 234 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு ரூபாய் 2.97 கோடி நிதிக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) திரு எம். சம்பத்குமார் அவர்கள் வழங்கி, 'இப்பயிற்சி நிதியை புதுவாழ்வு திட்ட விதிமுறைகளின்படி பயன்படுத்தி சமூக அமைப்புகளின் திறன்களை மேம்படுத்தி ஆற்றல்படுத்திட வேண்டுமென' கேட்டுக் கொண்டார். மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு பி. தனசேகர், இப்பயிற்சி நிதியின் மூலம் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் மற்றும் நிதி பயன்பாட்டு விதிமுறைகள் குறித்து எடுத்துரைத்தார்.■

கிராமப்புறங்களில் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இந்த நிதியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

நலிவுற்றோர் தனிநபர் கடனுதவி

திண்டுக்கல் மாவட்டம், கே.புதுக்கோட்டை ஊராட்சியில் வசித்து வருபவர் சோபியா. எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டு, கணவரால் கைவிடப்பட்ட சூழ்நிலையில் தனது தந்தையாரின் ஆதரவில் வாழ்ந்து வரும் இவர், கூலி வேலைக்கு சென்று குறைந்த கூலி பெற்று வறுமையில் வாழ்ந்து வந்தார். இந்நிலையில் புதுவாழ்வு திட்டத்தின் மூலமான சுய உதவிக் குழுவில் இணைந்து, கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் நலிந்தோர் தனிநபர் கடனுதவியாக ரூ. 10 ஆயிரம் பெற்று, கறவை மாடு வாங்கி வளர்த்து வருவதன் மூலம் தற்போது கணிசமான வருவாய் பெற்றுள்ள சோபியா, தன் வாழ்விற்கு வழிகாட்டிய புதுவாழ்வு திட்டத்திற்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறார்.■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (76,200 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

திறந்தவெளியில் மலம் கழிக்க போகும் பெண்களுக்குப் பலவித இடையூறுகள் ஏற்படுகின்றன. மற்றவர்களின் தவறான பார்வை, கேலி கிண்டலுக்கு ஆளாவதுடன் பாம்பு, பூச்சிகள் கடிக்கும் ஆபத்தும் உண்டாகிறது. போற்றி பாதுக்காக்கப் பட வேண்டிய பெண்களை, நாமே இப்படி திறந்தவெளியில் மலம் கழிக்க அனுப்பலாமா? வீட்டில் கழிவறை கட்டுங்கள். பெண்களின் மரியாதையைக் காக்கவும், பாதுகாக்கவும் இது ஒன்றுதான் வழி.

கழிவறை உபயோகமே, வாழ்க்கைக்கு கவுரவம்.

unicef
unite for children

வெளியில மலம் போனா சீச்சீ சொல்லப்பா!

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH(C)/455/12-14 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2012 - 14
Date of Publication 22.12.2013

நிதி உதவி வழிவகைகள்...
திறக்கப்படும் புதிய பாதைகள்



- அணுகும் வசதி இல்லாதவர்களுக்கும் கிளையில்லாமலே வங்கி வசதி
- நடமாடும் வங்கிச் சேவை வசதி
- வங்கிச் சேவை மையங்கள்
- கைரேகை மூலம் செயல்படும் காசாளும் இயந்திரங்கள்
- சுயஉதவிக் குழுக்களுக்கான சிறப்பு நிதியுதவிக் கிளைகள்
- நிதிசார் கல்வி மற்றும் கடன் ஆலோசனை மையம் (FLCC)
- இந்தியன் வங்கி சுயவேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனம் (INDSETI)
- நுண் காப்பீட்டுத் திட்டம்

ஒட்டுமொத்த வளர்ச்சிப் பாதையில்.... மலர்கின்ற புன்னகை...

மேலும் விவரங்களுக்கு: அருகில் உள்ள இந்தியன் வங்கி கிளையை தொடர்பு கொள்ளவும்.

கார்பரேட் அலுவலகம்:
254-260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
மின்னஞ்சல்: indmail@indianbank.co.in
கட்டணமில்லா தொலைபேசி: 1800 425 00 000
இணையதளம்: www.indianbank.in

इंडियन बैंक
இந்தியன் வங்கி
உங்கள் தொழில்நுட்பநேய வங்கி